# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, நவம்பர் 16, 2018. இதழ் - 39



சீனிப் பனை

மட்டுநகரின் ஒரு அடையாளமான சீனிப்பனை (சீமைப்பனை) குறித்த அரங்கத்தின் சிறப்புக் காணொளியை நேயர்கள் www.arangamnews.com இல் காணலாம்.

தாவரவியல் நிபுணர் குணம் சவரிராஜா அவர்களின் விளக்கச் செவ்வியும் அதில் இடம்பெறுகிறது.







**'சங்கு ஊதக்கண்டேன் சக்கரம் சுழலக் கண்டேன்...'**

நாட்டின் அரசியல் நிலவரம் மேலும் மேலும் கொந்தளிப்பாகிக் .....

பக்கம் - 03



**19வது திருத்தச் சட்டம்**

**212 MPக்கள் தமக்குத் தாமே வைத்துக்கொண்ட சூனியம்**

பக்கம் - 04



**மட்டக்களப்பில் இராச துரைக்கு பின்னர் முடிசூடா மன்னாகத் திகழும் ஹிஸ்புல்லா**

இலங்கை பாராளுமன்றத்தை கலைப்பதாக வர்த்தமானி....

பக்கம் - 05



**''அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கள்'' – அறிந்திருக்க வேண்டிய கதை**

தமிழர் மத்தியில் ஒரு விழா புகழ்பெற்று....

பக்கம் - 07



# ஸ்தம்பித்த நாடாளுமன்ற நடவடிக்கை

அரசியல் யாப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீறிவிட்டார் என்று எல்லோரும் கூறிவரும் நிலையில், சபாநாயகர் கரு ஜயசூரிய அரசியல் யாப்பை மீறிச் செயற்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபாநயகருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

உயர் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்ததால், மீண்டும் நாடாளுமன்றம் புதன்கிழமை கூட்டப்பட்டது. அவ்வாறு கூட்டப்பட்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு சாபாநாயகர் கரு ஜயசூரிய கேட்டார். அதற்கேற்ப ஜேவி.பியும் நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்பித்தது.

வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. ஆனால் அந்த வாக்கெடுப்பை நடத்தமுடியாது என்று மஹிந்த தரப்பு வாதிட்டது. அதில் எந்தவிதமான ஜனநாயக நியாயப்படுத்தலும் இல்லை என்று கூறி, சபாநாயர் வாக்கெடுப்பை நடத்தினார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு அணி சபையை விட்டு வெளியேறியது. ஆனாலும் 122 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் ரணில் தரப்புக்கு பெரும்பான்மை உள்ளது எனக் குறிப்பிட்டு, மஹிந்த பிரதமர் பதவியை வகிக்க முடியாதென நாடாளுமன்றத்தில் சபாநாயகர் புதன்கிழமை முற்பகல் அறிவித்தும்விட்டார்.

இந்த நிலையில் வியாழக்கிழமை நாடாளுமன்றம் கூடியபோதும் சாபநாயகர் அந்த அறிவிப்பை மீண்டும் வெளியிட்டார். ஆனாலும் மஹிந்த ராஜபக்ச பிரதமர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். விசேட உரையையும் நிகழ்த்தினார்.

ஆனால் அந்த உரையை ரணில் தரப்பும் ஜேவி.பியும் நிராகரித்தன. இதனால் இந்த உரையை வாக்கெடுப்புக்கு விடுமாறு ரணில் தரப்பு மூத்த உறுப்பினர் லக்ஸ்மன்

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# மட்டக்களப்பில் 60,000 ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கின



மட்டக்களப்பு மாவட்டத்தில் சில தினங்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக இதுவரைக்கும் அறுபதாயிரம்(60,000) ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் இம் மழை ஓரிரு தினங்கள் தொடர்ந்தால் மாவட்டத்தில் அனைத்து நெற் செய்கையும் பாதிப்புக்குள்ளாகி மீண்டும் புதிதாகச் செய்கை மேற்கொள்ள வேண்டியேற்படும் எனவும் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் ந.சிவலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் நீரிழ் மூழ்கிவருவது தொடர்பில் வினாவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்; 'இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் (168,000)ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அதில் நீரில் மூழ்கும் வீதம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. மாவட்டத்தினை பொறுத்தளவில் வாகரை பிரதேசத்திலேயே அதிக வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. இம் மழையானது ஓரிரு தினங்கள் தொடர்ந்தால் மாவட்டத்தில் உள்ள அனைத்து வயல் நிலங்களும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படுவதுடன் அனைத்து வயல் நிலங்களையும் மீண்டும் விதைக்க வேண்டிய நிலை ஏற்படும். வழமையாக

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# இலங்கை நாணயம் வீழ்ச்சி




இலங்கை நாணயம் நேற்று மேலும் வீழ்ச்சியடைந்தது. இலங்கையில் தொடரும் அரசியல் நெருக்கடியே இதற்கான காரணமாக பொருளாதார வல்லுனர்களால் கூறப்படுகின்றது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று 178.10 சதமாக குறைந்தது.

தொடர்ந்து வீழ்ந்துவந்த இலங்கை நாணயம் நவம்பர் 2இல் ஓரளவு மீழ்ச்சி கண்டது. ஆனாலும் மீண்டும் அது நேற்று பெருவீழ்ச்சியை கண்டுள்ளது.


முதலாம் வகுப்பிற்கு பிள்ளையை சேர்ப்பதில்

அநீதி இழைக்கப்பட்டதா?

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

# சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்ட வடிகான்களை மீட்கும் நடவடிக்கை





தனியாரால் சட்டவிரோதமான முறையில் பிடித்து, உரிமை கோரப்பட்டுவந்த பாரிய வடிகான்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகர சபை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் வியாழக்கிழமை மட்டக்களப்பு காத்தான்குடி எல்லைப்பிரதேசங்களிலுள்ள தோணாக்களை சீர் செய்யும் வேலைத்திட்டம் ஒன்று மாநகர முதல்வர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் நீர் வடிந்தோடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த வடிகான்கள் மற்றும் தோணாக்களை தனியார் சிலர் அடாத்தாகப் பிடித்து வேலியடைத்து உரிமை கோரி வந்தனர்.

இதனால் மழை காலங்களில் வெள்ள நீர் வடிந்தோடுவதற்கு வழியின்றி, பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட பொதுமக்கள் முகங்கொடுத்து வந்தனர். இதன் காரணமாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவனின் பணிப்பின் பேரில் குறித்த வடிகான்களையும், தோணாக்களையும் கையகப்படுத்தும் செயற்பாடுகளை மாநகரசபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்ட விரோதமாக மழை நீர் வடிந்தோடும் வடிகான்களையும் தோணாக்களையும் அடைத்து உரிமைகோரியோருக்கு கடிதம் மூலம் அவற்றை மாநகர சபையிடம் ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டும், நோட்டிஸ் மூலம் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டும் வந்த நிலையில் தற்போது மாநகரசபையின் அதிகாரத்தினைப் பிரோகித்து குறிப்பிட்ட அனைத்து வடிகான்களையும் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக பூநொச்சிமுனை, மஞ்சந்தொடுவாய் போன்ற பிரதேசங்களில் உள்ள பிரதான வடிகான்களை மாநகர சபை கையகப்படுத்துவதன் ஊடாக மழைக் காலங்களில் கல்லடி, நாவற்குடா பிரதேசங்களில் பாரிய வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 14 வயது சிறுமியை பாலியல் துஸ்பிரயோம் செய்த குற்றச் சாட்டில் 19 வயது இளைஞன் கைது

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள ஆனைக்கட்டு பிரதேசத்தில் 14 வயது சிறுமியை ஆசைவார்த்தை காட்டி பாலியல் துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 19 வயது இளைஞர் ஒருவரை கடந்த திங்கட்கிழமை (12) கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள சிறுமியின் தந்தை வெளிநாட்டிற்கு வேலைவாய்பு பெற்று சென்றுள்ள நிலையில் தரம் 10 ஆண்டில் கல்வி கற்று வந்த சிறுமி கடந்த 6 மாதமாக பாடசாலை செல்லாது வீட்டில் இருந்து வந்துள்ளார் இந்த நிலையில் சிறுமிக்கு குறித்த இளைஞன் கையடக்க தொலைபேசி ஒன்றை வாங்கி கொடுத்து, அவருடன் உரையாடி வந்ததாக கூறப்படுகின்றது. தாயார் ஏனைய குழந்தைகளுடன் தனியறையிலும் சிறுமியை தனியறையிலும் படுத்துறங்கி வந்துள்ளனர்.

சிறுமி குறித்த இளைஞருடன் சேர்ந்து தனது அறையின் யன்னல் கிறிலின் ஆணிகளை கழற்றி, யன்னல் ஊடாக இரவில் இளைஞன் அறைக்கு சென்று இருவரும் ஒன்றாக இருந்து வந்துள்ள நிலையில் சம்பவதினமான திங்கட்கிழமை இரவு வழமைபோல இளைஞன் யன்னல் ஊடாக அறைக்குள் சென்ற போது அதனைக்கண்டு நாய் குரைத்துள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# ‘விவசாய பாதிப்புக்கள் குறித்து அறிவிக்கவும்’

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீபத்திய சீர்ற்ற காலநிலையால் விவசாயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களை விவசாயிகள் உரிய முறையில் சமர்ப்பிக்க வேண்டும் என மட்டக்களப்பு மத்தி விவசாய வலய உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சலீம் தெரிவித்தார்.

சமீபத்தில் ஏற்பட்ட அடைமழை, பெருவெள்ளம் காரணமாக விவசாயிகள் தமது இழப்புக்கள் குறித்த விவரங்களைச் சமர்க்கவேண்டியது பற்றிக் கேட்டபோது அவர் விவரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக திங்கட்கிழமை (12.11.2018) மேலும் தெரிவித்த அவர், சமீப சில நாட்களாக நீடித்த அடைமழையும் பெருவெள்ளமும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தியிருப்பது தெரியவந்திருக்கின்றது.எனவே, விவசாயிகள் தாமதிக்காது தமது இழப்புக்கள் பற்றிய விவரங்களை முறைப்படி சமர்ப்பிக்க வேண்டும்.

இழப்புக்களை ஈடு செய்வதற்கான நிவாரணங்களாக உள்ளீடுகளையோ, விவசாய உபகரணங்களையோ, மானியங்களையோ அல்லது இழப்பீட்டுத் தொகையையோ பெறுவதற்கு விவசாயிகள் தமக்கேற்பட்ட இழப்புக்கள் சம்பந்தமான தகவல்களை துல்லியமாக உறுதிப்படுத்தி வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
எழுத்து வடிவத்திலே தங்களுக்கு ஏற்பட்ட

தொடர்ச்சி... (பக்கம் -11 )

தொடர்ச்சி...

# ஸ்தம்பித்த நாடாளுமன்ற நடவடிக்கை

கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். இந்த வாக்கெடுப்பிலாவது உங்கள் பெரும்பான்மையை நிரூபியுங்கள் என்றார் லக்ஸ்மன் கிரியெல்ல.

ஆனால் மஹிந்த தரப்பு உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். சபாநாயர் ஆசனத்தைச் சுற்றிநின்று கூச்சலிட்டனர். சிலர் கைலப்பில் ஈடுபட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. இதனால் உறுப்பினர் சிலருக்குக் காயங்களும் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

சபாநாயகரின் ஆசனத்திலும் தண்ணீர் ஊற்றப்பட்டது. நிலைமை மோசமடைந்ததால் மஹிந்த ராஜபக்ஷ சபையை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் ரணில், சம்பந்தன் ஆகியோரும் வெளியேறினர்.

நிலமையைக் கட்டுப்படுத்த முடியாமல் கரு ஜயசூரியவும் சபாநாயகர் ஆசனத்தில் இருந்து வெயேறினார். சில நிமிடங்களில் நாடாளுமன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

சபையில் குழப்பங்கள் ஏற்பட்டபோது, ஜனநாயகத்தைக் காப்பாற்றுமாறு ரணில் தரப்பு உறுப்பினர்கள் கோசமிட்டனர். ஆனால் மஹிந்த தரப்பு தமக்குப் பெரும்பான்மை இருப்பதாகப் பதிலுக்குக் கூறிக்கொண்டனர். அதேவேளை, மஹிந்த பிரதமர் அல்ல என்று சபாநாயகர் கூறிய பின்னரும் விசேட உரையாற்றிய மஹிந்த, சபாநாயகர் மீது குற்றம் சுமத்தினார்.

வெளிநாட்டுச் சக்திகளின் தேவைக்கும் அழுத்தங்களுக்கும் சபாநாயகர் செயற்படுவதாகவும் மஹிந்த கூறினார்.

வெளிநாட்டுச் சக்திகளின் உதவியுடன் தன்னைக் கொலை செய்ய ரணில் அரசாங்கம் சதி செய்தது என்றும் அதனால் பிரதமர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி மைத்திரி தன்னைக் கேட்டுக்கொண்டார் என்றும் மஹிந்த தனது உரையில் கூறினார்.

தானே பிரதமர் என்றும் மஹிந்த தனது உரையின் இறுதியில் குறிப்பிட்டார்.


இதேவேளை, மோசமடைந்து வரும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கில் சபாநாயகரின் அலுவலகத்தில் இடம்பெற்ற அவசரக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தை வெள்ளிக்கிமை பிற்பகல் 1.30க்கு கூட்டுவது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்றைய நாடாளுமன்ற அமர்வில் இடம்பெற்ற கைகலப்பு மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் தொடர்பாக கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வை அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் இராஜதந்திரிகள் சபாநாயகர் கலரியில் இருந்து பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

# மட்டக்களப்பில் 60,000 ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கின



எமது மாவட்டத்தில் சித்தாண்டி பிரதேசத்தில் காணப்படும் வயல் நிலங்கள் நீரில் தாழ்வதுண்டு. இம்முறை அப்பிரதேசங்களில் நீர் வடிந்தோடுவதனால் அங்கு சற்று குறைவான வயல் நிலங்களே நீரில் மூழ்கியுள்ளன.

அதுமாத்திரமின்றி குளங்களின் நீர்மட்டமானது அதிகரித்துக் கொண்டு செல்வதனையும் அறிக்கூடியதாக உள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால் எமது மாவட்டத்தில் விவசாயிகள் கூடுதலான பாதிப்பினை எதிர்நோக்க வேண்டியேற்படும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# ‘சங்கு ஊதக்கண்டேன் சக்கரம் சுழலக் கண்டேன்…’

*(மகாபாரதப் போரில் பாண்டவர், கௌரவர் என்ற சகோதரக் குழுக்களே எதிரெதிராகப் போரிட்டன என்பது அனைவரும் படித்தது. ஆனால், அந்தப் போருக்கு களப்பலி கொடுக்கப்பட்டும் அதனை முழுமையாகப் பார்த்த அரவானிடன், ‘என்ன நடந்தது’ என்று கேட்கப்பட்ட போது இங்கு சகோதரர்கள் ஒன்றும் செய்யவில்லை, ஆட்டியது ஆட்டுவித்தது அனைத்தும் கிருஷ்ணனே என்ற வெளிச்சக்தியே என்னும் பொருள்பட சங்கு ஊதக் கண்ண்டேன், சக்கரம் சுழலக் கண்டேன் என்ற … தொடரை ஒப்பித்தாராம். இலங்கை நிலைமைக்கும் வெளிச்சக்தியே காரணம் என்கிறார் “கருணாகரன்”. -- ஆசிரியர்)*

நாட்டின் அரசியல் நிலவரம் மேலும் மேலும் கொந்தளிப்பாகிக் கொண்டிருக்கிறது. அடுத்ததாக என்ன நடக்கும் என்பது யாருக்குமே தெரியாது என்ற நிலையே நீடிக்கிறது. ஜெயதேவ உயன்கொட போன்ற புத்திஜீவிகளே தற்போதைய நிலையின் வளர்ச்சியானது இரத்தக்களரி ஒன்றை உருவாக்கக்கூடிய – வன்முறைச் சூழலை விருத்தியாக்கிக் கொண்டிருக்கிறது என்று எச்சரித்திருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான உத்தரவை விடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட அப்படித்தான் சொல்லியிருந்தார், இரத்தக் களரி ஒன்று ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குதிரைப் பேரங்களுக்கு விலைபோவதைத் தடுப்பதற்காகவுமே பாராளுமன்றத்தைக் கலைப்பதாக. ஆனால் இதுவரையிலும் எத்தகைய பெரிய வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பது ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகிறது. நடக்கும் அரசியல் செயற்பாடுகளையிட்டு ஐதேக தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறது. இன்னொரு பக்கத்தில் ஜேவி.பி பெரியதொரு போராட்டத்தைக் கொழும்பில் நடத்தியுள்ளது. மற்றொரு



முனையில் பொதுஜனபெரமுனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து பாராளுமன்ற வளாகத்தையொட்டிய பகுதியில் நடத்தியுள்ளன.



இதைவிட உச்ச நீதிமன்ற வளாகம், பாராளுமன்ற வளாகம், அலரி மாளிகை போன்ற இடங்களிலும் வழமைக்கு மாறாக கட்சி ஆதரவாளர்கள், மக்களின் திரட்சிகள் காணப்படுகின்றன. கொந்தளிக்கும் சூழலில் இத்தகைய போராட்டங்கள் அநேகமாக வன்முறைச் சம்பவங்களை நோக்கி நகர்வதற்கான



வாய்ப்புகளை அளிப்பதுண்டு. அதுவும் இலங்கையில் இது சாதாரணமானது. இருந்தும் இதுவரையில் எத்தகைய அசம்பாவிதங்களும் நடக்கவில்லை என்பது கவனத்திற்குரியது.

இந்த வகையில் பொறுப்போடு செயற்பட்ட கட்சிகள், அவற்றின் தலைமைகள், பாதுகாப்புப் படையினர், ஜனாதிபதி, புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஸ மற்றும் அரசாங்கம் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

இப்பொழுதுகூட யாராவது ஒருவர் நிதானமிழந்தால் அனைத்தும் பாழ் என்ற நிலைமையே காணப்படுகிறது. அந்தளவுக்கு அரசியல் கொதிப்பு எரிபற்று நிலையில் உள்ளது. ஜனநாயக விழுமியங்களின் உச்சம் இதுவெனலாம். இதைப்பேணிக் கொள்வதே முதற் கவனத்திற்குரியது.

ஏனெனில் தற்போது நடந்து கொண்டிருக்கும் அரசியல் இழுபறிகளும் மோதல்களும் குழப்பங்களும் சீரழிவுகளும் இலங்கையர்களால் நடப்பதல்ல. இலங்கையர்களின் மூலம் வெளிச்சக்திகளினால் நடப்பது. வெளிச்சக்திகள் தமது தேவை, தமது நலன் போன்றவற்றுக்காக உள்ளூர் தலைமைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும் களமாகவும் விளையாட்டாகவுமே இன்றைய இலங்கை அரசியல் (சமூக, பொருளாதார) நிலவரங்கள் உள்ளன.

இந்த அரசியல் போட்டிகளில் வெளிச்சக்திகள் பகிரங்கமாகவே களத்தில் நின்று செயற்படுகின்றன. உச்ச நீதிமன்ற வளாகத்துக்குப்போய் அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கின்றன. பொறுப்பானவர்களோடு பேசி அவர்களுக்கு அறிவுறுத்தலை ஆலோசனை என்ற போரில் உத்தரவுகளை வழங்குகின்றன. 14.11.2018 இல் பாராளுமன்றம் கூடியபோது கலரியில் நிறைந்திருந்தது வெளிப்பிரதானிகளே. இதற்கு முன்பு நடந்த போராட்டங்களிலும் இதுதான் நிலை. எனவே நாட்டை யார் ஆள முற்படுவது, யார் வழிப்படுத்துவது என்பது தெளிவாகவே தெரிகிறது.

ஆகவே இந்தச் சக்திகள் எந்த நிலையிலும் எப்படியும் அடுத்த கட்ட நகர்வுகளைச் செய்யலாம். அதனால் உண்டாகும் பாதிப்பு அவற்றுக்குப் பெரிய தாக்கங்களை உண்டாக்கப்போவதில்லை.

எல்லோரும் இலகுவாகவே புரிந்து கொள்ளக்கூடிய எளிய சங்கதி இது. ஒரு பக்கம் மேற்குலகம். இன்னொரு பக்கத்தில் சீனா. இடையில் இந்தியா. சீனா ஒரு தரப்புக்கு ஆதரவளிக்கிறது என்றால் மறு தரப்புக்கு மேற்குலகம் பலமூட்டுகிறது. (குதிரைப் பேரங்களுக்குக்

**கருணாகரன்**

கூட இவையே பின்புலம். ஒரு தரப்பு ஆட்களை மறு தரப்பிலிருந்து பிடுங்கி எடுக்கிறது என்றால், மறுதரப்பு அவர்கள் அப்பால் செல்லாமலிருப்பதற்காக பெருமளவு பணத்தைக் கொடுக்கிறது. ஆகவே கட்சி தாவுதலுக்கும் பணம். தாவுதலைத் தடுப்பதற்கும் பணம் என்பதே அடிப்படையாகி விட்டது. மக்கள் நலன், கொள்கை, இலட்சியம் போன்ற எதுவுமில்லை.

இந்த நிலையில் கைப்பொம்மைகளாகி விட்டனர் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும். லட்சியவாதிகள் யாராவது இருந்தால் அவர்கள் இந்தச் சூழலில் தாக்குப் பிடிக்க முடியாமல் வெளியேறியிருப்பர்.

ஆகவே வெளிச்சக்திகள் தமது இஸ்டத்துக்குப் புகுந்து விளையாடக் கூடிய இடமாக இலங்கையின் அரசியல் களம் மாறியுள்ளது. சரியாகச் சொன்னால் அப்படி மாற்றப்பட்டு விட்டது. இலங்கையர்களைப் பயன்படுத்தியே இதைச் சாதித்துள்ளன. இதில் நாம் பேசும் ஜனநாயகம் என்பதும் இறைமை என்பதும் நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு என்பவையும் ஒரு வகையில் நமக்கே வியப்பளிப்பது. சிரிப்பூட்டுவது.

நல்லெண்ணம், மீளிணக்கம், புரிந்துணர்வு, ஐக்கியம், சமாதானம் என்று பெரியதொரு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்திய தலைவர்களும் அரசாங்கமும் இதற்கெல்லாம் எதிர்நிலையில் இன்று செயற்பட்டுக்கொண்டிருப்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மக்களுக்குப் போதித்தவர்களுக்கு இப்பொழுது மக்கள் இவற்றைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் மூன்றாம் நிலைச் சக்திகளின் பேரெழுச்சியே இந்தப் பாதக நிலையை மாற்றியமைப்பதற்கு உதவும். ஆனால் அதைக் கண்டு பிடிப்பதும் ஆதரித்து வளர்ப்பதும் மக்களுடைய கைகளில்தான் உள்ளது. இதற்கு முதலில் மக்கள் தங்களுடைய மனத்தில் இடத்தை வழங்க வேண்டும். நம்பிக்கை கொள்ள வேண்டும். மக்களிடத்திலே இதைப் பற்றிய புரிந்துணர்வை உண்டாக்குவதற்கு ஊடகங்களும் சிந்திப்போரும் முன்வர வேண்டும்.

இல்லையெனில் இப்போதுள்ளதையும் விட மோசமான நிலைக்கே நாடு தள்ளப்படும். அது பேரழிவாகப்போய் முடியும். அந்த நிலை வருவதற்கு அதிக காலம் ஏற்படாது.

பிறத்தியாருக்காக நமது தலைகளை நாமே உடைத்துக் கொள்ளுவதைக் காட்டிலும் நாம் நமக்காக என்றிருப்பதே அவசியமானது. அதாவது பிரித்தாளும்



தந்திரத்துக்குப் பலியாகாமல் பார்த்துக் கொள்வது. முதலில் இனரீதியாகப் பிரித்தாளும் தந்திரம் பாவிக்கப்பட்டது. இப்பொழுது அரசாங்கத்தை உடைத்துப் பலவீனப்படுத்தி அனைத்துத் தரப்பையும் பிரித்தும் குழப்பியும் ஆளும் தந்திரம் கையாளப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கையர்களாகச் சிந்திப்பதே இன்று அனைவருக்குமான பொறுப்பாகும்.



# பட்டறிவு

## 19வது திருத்தச் சட்டம்

## 212 MPக்கள் தமக்குத் தாமே வைத்துக்கொண்ட சூனியம்

பாராளுமன்றத்தை ஜனாதிபதி சிறிசேன கலைத்தது தொடர்பிலான விசாரணை 13 அன்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் சட்ட மா அதிபர் ஜயந்த ஜயசூரிய தனது விளக்கத்தை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்திருந்தார். அதன்படி அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமையவே கலைக்கப்பட்டிருப்பதாகவும் தற்போதைய முறைப்பாடுகளை நிராகரித்து தள்ளுபடி செய்யும்படியும் அவர் உயர் நீதிமன்றத்தைக் கோரியிருந்தார்.

இங்குதான் நமக்கு இன்னொரு கேள்வி எழுகிறது. அதாவது எதேச்சதிகாரம் மிக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது அல்லவா 19வது திருத்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று. அப்படியிருக்க தான் விரும்பும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்து மக்கள் ஆணையை மீறும் வழிகள் ஜனாதிபதிக்கு அந்த யாப்பின் மூலம் இருக்கிறது என்றால் அதற்கான பொறுப்பு யாருடையது. இப்போது "பாராளுமன்ற ஜனநாயகம் மீறப்பட்டுவிட்டது", "மரபு மீறப்பட்டுவிட்டது", "தார்மீகம் இழக்கப்பட்டுவிட்டது" என்று குய்யோ முறையோ என்று கத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரை பார்த்து கோபிக்க முடியும். அண்ணாந்து தான் உமிழ முடியும்.

19வது திருத்தச் சட்டம் 28.04.2015 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது மொத்த 225 உறுப்பினர்களில் 212 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தார்கள். 10பேர் சமூகமளிக்கவில்லை. ஒருவர் (அஜித் குமார - முன்னிலை சோசலிசக் கட்சி) வாக்களிப்பில் தவிர்த்துக்கொண்டார், சபாநாயகர் வாக்களிப்பதில்லை.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரியல் அட்மிரல் சரத் வீரசேகர மாத்திரமே அதற்கு எதிராக வாக்களித்தவர். இன்றைய இனவாத தரப்பின் முக்கிய பேச்சாளர் அவர். போர்க்குற்றச்சாட்டுகளை முறியடிப்பதற்காக மகிந்த தரப்பில் சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் பிரதான ஆயுதம் அவர். ஜெனிவாவில் தமிழர் தரப்புக்கு சிம்மசொப்பனமாக இருப்பவர்.



ஆனால் 25.04.2015 அன்று தந்தை செல்வா நினைவு தினத்தின் போது சொற்பொழிவாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க "நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்குக் காரணம் சிங்கள பெரும்பான்மை அரசாங்க ஆட்சியே... அதிகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு சிறுபான்மை சமூகங்கள் ஓரங்கட்டப்படுகின்றனர்... 19 வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவது சிங்களப் பெரும்பான்மை இனத்தின் அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்குத் தான்" என்றார். அந்த பேச்சை அடுத்த நாள் சிங்களப் பத்திரிகைகள் பல சந்திரிகாவுக்கு எதிரான பிரச்சாரத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டன. 19வது திருத்தச் சட்டத்தை எதிர்த்த ஒரே ஒரே நபரான சரத் வீரசேகர சந்திரிகாவின் இந்த வாசகத்தைப் பாராளுமன்ற உரையில் பயன்படுத்திக்கொண்டார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதன் மூலம் சிறுபான்மை இனங்களுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்றும், தமிழர்களும், பிரிவினைவாத உணர்வும் பலப்படும் என்றும்



பாராளுமன்றத்துக்கு வெளியில் உள்ள இனவாதத் தரப்பினர் கொக்கரித்தத்தது போலவே பாராளுமன்றத்திலும் சரத் வீரசேகர கர்ஜித்தார்.

"நாட்டின் பிரதான பொலிஸ் பாதுகாப்புக்கு அதிகாரியான பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் கூட அவரிடம் இருந்து பறிக்கப்பட்டு பிரதமரின் கைக்கு செல்கிறது...

அன்று புலிகளுடன் போலிப் பேச்சுவார்த்தை நடத்திய ரணிலின் அரசாங்கத்தை ஒரே வருடத்தில் சந்திரிகாவால் கலைக்க முடிந்தது இந்த ஜனாதிபதிக்கு இருந்த நிறைவேற்று அதிகாரத்தால் தான். இப்போது இதன் மூலம் நான்கரை வருடங்களுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாதபடி செய்யப்பட்டிருக்கிறது." என்றெல்லாம் அவர் உரையாற்றினார். இதுபற்றி சரத் வீரசேகர 24.12.2017 அன்று திவயின பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை முக்கியமாக கவனிக்கத்தக்கது.

மகிந்த குடும்பத்தினரை இலக்கு வைத்து முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சார்ந்த தரப்பினர் குற்றம் சுமத்தினர்.

மூன்றாவது தடவையாக ஒருவர் ஜனாதிபதியாக போட்டியிட முடியாது.
ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் வயதெல்லை 30இலிருந்து 35ஆக அதிகரிக்கப்பட்டமை.
இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தலில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்

ஆகிய திருத்தங்களை சுட்டிக் காட்டினார்கள்.

19வது திருத்தச் சட்டத்தின் மூலம் அரசியலமைப்பில் மொத்தம் 174 இடங்களில் திருத்துவதற்கான யோசனை 2015 மார்ச் 13 அன்று வர்த்தமானிப்

**என்.சரவணன்**

பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அதில் இவையும் உள்ளடங்கும்.

நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்து பறிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு அந்த அதிகாரத்தை வழங்குவது நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதான இலட்சியம் என்று 2015 ஆரம்பத்தில் கூறப்பட்டது.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் பிரதான அம்சம் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை. ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை தவிர எதையும் செய்யும் அதிகாரம் தனக்கு இருப்பதாக கூறிக்கொண்டார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

அப்பேர்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் நடத்திய எதேச்சதிகார ஆட்சியினால் நாடு பட்ட துன்பங்கள் அதிகம். ஜனாதிபதியின் இந்த அதிகாரங்களை அகற்ற வேண்டும் என்று நாடளாவிய ரீதியில் எதிர்ப்பலை உருவானது. 90களின் ஆரம்பத்தில் இந்த அலை பெருகியது. சந்திரிகா 1994இல் ஆட்சியேறியபோதும் நிறைவேற்று ஜனாதிபதிமுறையை ஒழிப்பேன் என்றே சூளுரைத்தார். ஆனால் அவர் ஜே.ஆரை விட மோசமான நிலைக்குச் சென்று பொதுத் தேர்தலின் மூலம் தெரிவான ஆட்சியை (விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த ரணில் ஆட்சியை) ஒரே ஆண்டில் கலைத்தார்.

அதன் பின்னர் மகிந்த மற்றவர்கள் செய்யத் தவறிய அந்த நிறைவேற்று அதிகார ஒழிப்பை தான் ஒழிப்பதாக உறுதியளித்துக்கொண்டு வந்தார். ஆனால் மகிந்த ராஜபக்ச அளவுக்கு இலங்கையில் இந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்த ஒரு ஆட்சியாளரும் இல்லை எனும் அளவுக்கு நிலைமை உச்சம் பெற்றது. நிறைவேற்று அதிகாரங்களை இல்லாது செய்வதற்குப் பதிலாக 18 வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஜே.ஆர் உருவாக்கிய அதிகாரங்களை விட மேலதிகமான அதிகாரங்களை தனதாக்கிக்கொண்டார். அடுத்த தடவை தானே மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்காக இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக தெரிவாக முடியாது என்கிற அரசியலமைப்பு வரையறையை அகற்றினார். அதுமட்டுமன்றி முக்கிய அரச அதிகாரிகளின் நியமனங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தை இத்திருத்தத்தின் மூலம் தனதாக்கிக்கொண்டார்.

18வது திருத்தச் சட்டம் 09.09.2010அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேளை அதற்கு ஆதரவாக வாக்களித்த தமிழர்கள் பீ.திகாம்பரம், பிரபா கணேசன், ஜே ஸ்ரீ ரங்கா ஆகிய மூவரே என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். முஸ்லிம்கள் தரப்பில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 8 பேரும் ஆதரவாகத் தான் வாக்களித்தார்கள்.

மகிந்த அரசின் கொடுமைகளை எதிர்த்து எதிர்க்கட்சிகளுடன் சமூக – ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்த போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, நிறைவேற்றதிகாரத்தை ஒழித்தல் ஆகிய இரண்டு காரணிகளையும் முதன்மைப்படுத்தினர். அதை செய்வதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தை உருவாக்கிக்கொள்ளும் நோக்குடன் பிரதான கட்சிகள் இரண்டும் மகிந்தவையும் எதிர்த்துக்கொண்டு வரலாற்றில் ஒன்றிணைந்தன. ஆனால் ஆட்சியமைத்த இந்த மூன்று ஆண்டுகளில் அவர்களால் அந்த இரண்டு பிரதான விடயத்தையும் சாதிக்க முடியவில்லை. 19வது திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தை எதிர்பார்த்தபடி குறைக்கமுடியவில்லை. 1978இல் இருந்தது போல இன்றும் ஜனாதிபதி தான் முப்படைகளின் தளபதி.

இப்போது நிகழ்ந்துள்ள தேசிய நெருக்கடி

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மட்டக்களப்பில் இராசதுரைக்கு பின்னர் முடிசூடா மன்னாகத் திகழும் ஹிஸ்புல்லா

இலங்கை பாராளுமன்றத்தை கலைப்பதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு 12மணி நேரத்திற்கு முதல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சராக ஏற்கனவே சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஹிஸ்புல்லா பாராளுமன்ற கலைப்பு அறிவிப்பு வருவதற்கு முன்னர் அமைச்சரவை அமைச்சர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பிரதி அமைச்சர் இராஜாங்க அமைச்சர் பதவிகள் இல்லாமல் போகும் என்ற நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திக்குழுத்தலைவர் அமைச்சர் என்ற அதிகாரத்துடன் செயற்படக்கூடிய வகையில் அந்த பதவி ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்பட்டிருக்கலாம்.

ஹிஸ்புல்லாவுக்கு அதிகாரம் பொருந்திய முழு அமைச்சு பதவி கிடைத்ததால் மகிழ்ச்சியடைபவர்களும் உண்டு. அச்சமடைபவர்களும் உண்டு.

அமைச்சர் என்ற அதிகார பலத்தை வைத்துத் தங்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள் அதிகரிக்கும் என்ற அச்சம் தமிழ் மக்களிடம் காணப்படுகிறது என்பது வெளிப்படையான விடயம் தான். இது அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் அச்சம் ஆகும்.

இனமத அரசியல் கட்சி பேதங்கள் எல்லாவற்றையும் கடந்து பார்த்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 29 வருடங்களுக்கு பின்னர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த கே.டபிள்யூ.தேவநாயகம், செல்லையா இராசதுரை ஆகியோர் 1989ஆம் ஆண்டுவரை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்தனர்.

அதன் பின்னர் இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களாக சிலர் பதவி வகித்த போதிலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக யாரும் நியமிக்கப்பட்டதாக தெரியவில்லை.



யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்தவர்கள் அமைச்சரவையில் அங்கம் வகித்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

29ஆண்டுகளுக்கு பின்னர் அந்த வாய்ப்பு மட்டக்களப்பிற்கு கிடைத்திருக்கிறது.

1989ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று, இலங்கை நாடாளுமன்றத்திற்கு மிகக்குறைந்த வயதுள்ள இரு இளைஞர்கள் சென்றனர். அந்த இரு இளைஞர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தான்.

ஒருவர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தெரிவான கோவிந்தன் கருணாகரம் (ஜனா ) அவருக்கு அப்போது 25 வயதுதான் பூர்த்தியாகியிருந்தது.

மற்றவர் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சியிலிருந்து தெரிவான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா. அவருக்கு அப்போது 26 வயது பூர்த்தியடைந்திருந்தது.

மட்டக்களப்பு வரலாற்றில் மட்டுமல்ல இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றிலும் இளவயதில் நாடாளுமன்றம் சென்றவர்கள் என இவர்களின் பெயர் பதிவாகியிருக்கிறது.

தமிழ் அரசியல்துறை வரலாற்றில் மிக நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்தவர் (1956 முதல் 1989 வரை 33 வருடங்கள்) என்ற பெருமையை பெறுபவர் செல்லையா இராசதுரைதான்.

செல்லையா இராசதுரை 29வயதில் நாடாளுமன்றத்திற்கு சென்றார். அதேபோல 1977ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க 28 வயதில் நாடாளுமன்றத்திற்கு சென்றார்.

இராசதுரை, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாக 30ஆண்டுகளுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்தார்கள் என்ற பெருமையை பெறுகிறார்கள்.

மட்டக்களப்பு வரலாற்றில் இராசதுரைக்கு பின்னர் நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார் என்றால் அது எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாதான். இதுவரை 25 ஆண்டுகள் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்திருக்கிறார்.

ஹிஸ்புல்லா மீது தமிழர் தரப்பு பல விமர்சனங்களை முன்வைக்கலாம். ஏன் அவரின் பிறந்த ஊரான காத்தான்குடியில் கூட அவர் மீது விமர்சனங்களை வைப்பவர்கள் இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் கடந்து ஹிஸ்புல்லாவின் அரசியல் வளர்ச்சி மட்டக்களப்பில் அசைக்க முடியாத ஒரு புள்ளியில் நிற்கிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைத்துறையின் இறுதி ஆண்டு மாணவனான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா 1988ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தலில் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

## இரா.துரைரத்தினம்

அதனைத் தொடர்ந்து 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

1989ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சியின் சார்பில் அம்பாறை மாவட்டத்திலிருந்து கட்சியின் தலைவர் அஷ்ரப் அவர்களும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஹிஸ்புல்லாவின் 30வருட அரசியல் வளர்ச்சி என்பது மட்டக்களப்பில் தோற்கடிக்க முடியாத அரசியல்வாதியாக உயர்ந்திருக்கிறார். எவ்வாறு மட்டக்களப்பில் வீழ்த்தப்பட முடியாதவராக இராசதுரை திகழ்ந்தாரோ அதேபோல இன்று ஹிஸ்புல்லா திகழ்ந்து வருகிறார்.

இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 1993ஆம் ஆண்டு மட்டக்களப்பில் ஜனாதிபதி நடமாடும் சேவை நடைபெற்ற போது பைல் கட்டுடன் ஒவ்வொரு அமைச்சாக சென்று தனது பிரதேச சமூக மக்களின் பிரச்சினைகளை அமைச்சர்களிடம் நேரடியாக சமர்ப்பித்த துடிப்புள்ள இளைஞனாக அன்று ஹிஸ்புல்லாவை கண்டேன். அப்போது அவர் ஆளும் கட்சி உறுப்பினர் அல்ல.

ஏற்கனவே கச்சேரி கூட்டங்களுக்கு வருகை தரும் போது ஹிஸ்புல்லாவை சந்தித்திருக்கிறேனே ஒழிய நெருங்கமான பழக்கம் கிடையாது.

ஜனாதிபதி நடமாடும் செயலகத்தில் என்னை கண்ட ஹிஸ்புல்லா தான் அமைச்சர்களிடம் நேரடியாக என்னென்ன பிரச்சினைகளை முன்வைத்து தீர்வு கண்டிருக்கிறேன் என்ற விடயங்களை கூறினார். அதை பத்திரிகையில் பிரசுரிக்குமாறு அதன் பிரதிகளையும் தந்தார்.

ஜனாதிபதி நடமாடும் செயலகத்தில் ஹிஸ்புல்லாவின் முயற்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஒரு வாரம் தொடர்ச்சியாக தினகரன் பத்திரிகையில் எழுதினேன். ஹிஸ்புல்லாவுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

ஹிஸ்புல்லாவின் செய்திகளுக்கு நான் முக்கியத்துவம் கொடுப்பது பற்றி அப்போது ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் என்மீது கடுப்பாகி லேக்கவுஸ் மேலிடத்திற்கு முறைப்பாடு செய்திருந்தனர் என்பது வேறு கதை.

1994ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்த போது ஹிஸ்புல்லா தபால் தொலைத்தொடர்புகள் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் பிரதி அமைச்சு, இராஜாங்க அமைச்சு பதவிகளை வகித்தாலும் முழு அமைச்சருக்குரிய அதிகாரம் படைத்தவராகவே திகழ்ந்தார்.

இன்று இலங்கையின் அபிவிருத்தி அடைந்த நகரங்களின் வரிசையில் முன்னணியில் இருக்கும் ஒரு நகரமாக காத்தான்குடி திகழ்கிறது என்றால் அதனை வளர்த்தெடுத்த பெருமை ஹிஸ்புல்லாவையே சாரும். அவரை இப்போது காத்தான்குடியின் குறுநில மன்னர் என்றே சொல்லலாம்.

1990களில் இருந்த காத்தான்குடியையும் இப்போது இருக்கின்ற காத்தான்குடியையும் பார்க்கின்ற போது பிரமிப்பாக இருக்கிறது.

ஹிஸ்புல்லா பற்றி தமிழ் மக்கள் மத்தியிலும் விமர்சனங்கள் உண்டு. ஏன் அவர் பிறந்த காத்தான்குடியில் உள்ள ஒரு சாராரும் அவர் மீது கடும் விமர்சனங்களை வைத்து வருகின்றனர். ஹிஸ்புல்லா சேர் எப்பவும் ஜனாதிபதியின் கட்சிதான். எந்த ஜனாதிபதி வந்தாலும் அவர் ஜனாதிபதியின் கட்சியில் தான் இருப்பார் என காத்தான்குடியை சேர்ந்த இளைஞர் ஒருவர் அண்மையில் பகிடியாக சொன்னார்.

அதுதான் அவரின் அரசியல் வளர்ச்சியின் சாணக்கியமாக கூட இருக்கலாம்.
தமிழர்கள் முஸ்லீம்கள் என்ற இன முரண்பாடுகள் வளராமல் இருந்திருந்தால், அரசியல் வாக்கு வங்கிக்காக இனவாதம்

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## இயற்கையோடு இயற்கையாக வாழ்தல்

'கொல்லநுலை பாடசாலையில் ஊரே கூடியிருந்தது. இதனால் பாடசாலையே மகிழ்ச்சி கொண்டது. அதனைப்பார்த்து நானும் பூரிப்படைந்தேன்' என சசிகுமார் புவிக்குமாருடன் கூறினான். அவ்வாறு என்னதான் நடைபெற்றதென புவிக்குமார் வினவ சசிகுமாரும் தொடங்கினான்.

'மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில், அதிகஸ்ட இடைநிலை பாடசாலையாக கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம் விளங்குகின்றது. இவ்வித்தியாலயம் 1993.11.10ல் ஆரம்பிக்கப்பட்டது. இதனது வெள்ளிவிழா கொண்டாட்டமும், பண்பாட்டு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. சனிக்கிழமை காலை, மாலையென இரு



அரங்காக நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. காலை நிகழ்வுகளை நேரத்திற்கு ஆரம்பிப்பதற்கு ஏற்பாட்டாளர்கள் எண்ணியிருந்த போதும், அதிதிகளின் வருகைதமாதித்தமையால் சிறிது நேர தாமதத்தின் பின்பே நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வில் வழமைபோன்று அதிதிகளை மாலை அணிவித்து வரவேற்பது இங்கு நடைபெறவில்லை. இதற்கு மாறாக பண்பாட்டு ஊர்வலத்துடன் பாடசாலை வளாகத்திற்குள் அதிதிகள் அழைத்துவரப்பட்டனர். இவ்ஊர்வலத்தில், தமிழர் பாரம்பரிய இன்னிய நடனம், சுழகு நடனம், கோலாட்டம் போன்ற நடனங்களுடன், பாடசாலை சூழலில், அங்குள்ள மக்கள் செய்கின்ற தொழிலினை எடுத்துக்காட்டும் வகையில் மண்வெட்டி, தாக்கத்தி, ஓலைப்பெட்டி போன்றவற்றை ஏந்தி, ஆடியவர்களாக மாணவர்கள் வருகைதந்தனர். மாணவர்களின் நடனங்களை பார்வையிட்டு, அதன்பின்னால், வருகைதந்த அதிதிகளுக்கு பாடசாலையின் முகப்பில் வைத்து, பன்னீர் தெளித்து, திருநீறு, சந்தனம் சாத்தி வெற்றிலை வழங்கி வரவேற்கப்பட்டனர். நிகழ்வு நடைபெற்ற சூழலும், இயற்கையாக கிடைத்தப் பொருட்களைப் பயன்படுத்தி அழகுபடுத்தப்பட்டிருந்தன.

பாடசாலையின் ஒருபக்கமாக பண்பாட்டு பொருட்களும் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. பாடசாலையின் முதலறையில், உணவுக்காக பயன்படுத்தப்படுகின்ற 40 வகையான இலைவகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து வீட்டில் பயன்படுத்தப்பட்ட வெங்கலப்பொருட்கள், ஓலையினால் ஆக்கப்பட்ட பொருட்கள், கருங்கல்லினால் ஆக்கப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமையுடன், இன்னோர் அறையில் விவசாயம், மீன்பிடி, ஏனைய தொழில்களுக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்களும், இறுதியறையில் கூத்துக்காக பயன்படுத்தப்படுகின்ற பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. வகுப்பறைகளில் இவ்வாறான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட, வெளிச்சூழலிலும் பல பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மரத்தின் மேல் பரண், நிலத்தில் சிறாம்பி, சிறிய குடிசை, தொட்டில், ஊஞ்சல் என்பன அமைக்கப்பட்டிருந்தன. அதேபோன்று வண்டிலும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது. பண்பாட்டு கலைநிகழ்வுகள் ஏற்பாடாக இருந்தமையுடன், இந்நிகழ்வுகள் அனைத்தையும் நடாத்துவதற்கென களரியும் அமைக்கப்பட்டிருந்தது. களரியிலே வசந்தன், கூத்து, கரகம், கும்மி, கோலாட்டம், வேடுவர் நடனம், காவடி நடனம், நாட்டார் பாடல், போன்ற பண்பாட்டு நிகழ்வுகளும், வெளியில், கிளித்தட்டு, சுரக்காய் இழுத்தல், பிள்ளையார்கட்டை போன்ற பண்பாட்டு விளையாட்டுக்களும் நடைபெற்றன.

**படுவான் பாலகன்**

நிகழ்வுகளுக்கு அழைக்கப்பட்டவர்கள் அணிவதற்காக செய்யப்பட்டிருந்த சின்னமும், பன்னாடை, பனையோலை இரண்டையும் பயன்படுத்தியே செய்யப்பட்டிருந்தது. சிற்றுண்டிகளாக கொழுக்கட்டை, முறுக்கு என்பன வழங்கப்பட்டதுடன், குடிப்பதற்காக தேநீரும் பரிமாரப்பட்டது. தேநீரில் நன்னாரி வேர் என்ற மூலிகையே கலந்து வழங்கப்பட்டது. மதிய உணவும் இப்பிரதேசத்தில் கிடைத்தவையை பயன்படுத்தி, உணவு சமைத்து வழங்கப்பட்டமையுடன், அவ்வுணவும், பாயில் அமரச்செய்யப்பட்டு வாழையிலே பரிமாறப்பட்டது' என்றான் சசிக்குமார்.

பாடசாலைகள் மனப்பலமுள்ள சமூகத்தினை உருவாக்குவதனை நோக்காக கொண்டு செயற்பட வேண்டுமென்ற தூரநோக்கு இருந்தாலும், பல பாடசாலைகள் அடைவுமட்டத்திற்காக மாத்திரம் மாணவர்களை வழிப்படுத்துகின்ற நிலையையே மேலோங்கியுள்ளமையை யதார்த்த ரீதியாக காணமுடிகின்றது. மனப்பலமுள்ள சமூகத்தினை உருவாக்குவதற்கு பாடரீதியான அடைவுமட்டம் மாத்திரம் எவ்வகையிலும் செல்வாக்கு செலுத்தாது, இதனைமாத்திரம் நோக்காக கொண்டு, ஆசிரியர்களும், கல்விசார் உத்தியோகத்தர்களும் செயற்பட்டால் சமூகத்தில் நற்பிரஜைகள் உருவாக்கப்படமாட்டார்கள். இதனையே நன்கு தற்காலச் சூழலில் காணவும் முடிகின்றது. பாடரீதியாக அடைவுமட்டத்தினை மாத்திரம் பெற்று உயர்ந்த தொழிலில் உள்ளவர்கள் பலரே, சமூகத்தில் தவறிழைப்பவர்களாக உள்ளனர். நமது மொழியில் கூறினால் 'படித்தவர்கள்தான் அதிகம் பிழைவிடுகின்றனர்' என்ற வார்த்தைப்பிரயோகம் எம்மத்தியிலே அதிகம் உரைக்கப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு, மாணவர்கள் மத்தியில் அனுபவக்கற்றல்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றன. இவ்வாறான அனுபவக்கற்றல்களை வழங்கக்கூடிய செயற்பாடுகளாகதான் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் அமைந்துள்ளன. இவற்றினை



பாடசாலைகள் நடைமுறைப்படுத்தாமல் அல்லது இணைப்பாடவிதானத்தில் மாணவர்கள் உள்வாங்கப்பட்டால், பாடரீதியான அடைவுமட்டம் குறைந்துவிடும் என்ற சிந்தனையினை கொண்டிருக்கின்றனர். இச்சிந்தனையை மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியிலும் விதைத்திருக்கின்றனர். இதனால் இற்றைவரை பாடரீதியான அடைவுமட்டத்திற்கே பெற்றோர்களும் முன்னுரிமை அளிக்கின்றனர். இதனால் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற உளநெருக்கடிக்களை புரிந்துகொள்வதாக தெரியவில்லை. என தனது ஆதங்கத்தினை கொட்டித்தீர்த்தான் புவிக்குமார்.

புவிக்குமாரின் வார்த்தைக்கு வலுச்சேர்க்கும் வகையில், பேச ஆரம்பித்தான் சசிகுமார், 'உண்மையான, யதார்த்தமான விடயத்தினை கூறினீர். நானும் பல பிள்ளைகளைப் பார்த்திருக்கின்றேன். தோளிலும், மனதிலும் பாரத்தினை சுமத்துகின்ற நிலையே பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. ஆனால், கொல்லநுலைப்பாடசாலையில் நடைபெற்ற, வெள்ளி விழாவும், பண்பாட்டு நிகழ்வும் மாணவர்களுக்கான புத்துணர்ச்சியை கொடுத்த விழாவாக என்னால் நோக்கமுடிந்தது. பாடசாலையில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களும் இந்நிகழ்வில் உள்வாங்கப்பட்டிருந்தனர். இவர்களின் முகத்தில் தம்மை மறந்த மகிழ்ச்சி மேலோங்கியிருந்தது. நேர முகாமைத்துவத்திற்கு ஏற்ப செயற்பட்டமை, தமது ஆற்றுகையை சிறப்பாக செய்தமை, தைரியத்துடன் கூச்சமின்றி ஆற்றுகை செய்தமை, பாத்திரங்களுக்கேற்ற வகையில் தம்மை மாற்றிக்கொண்டமை, தமக்கான வளத்தினை தேடிக்கொண்டமை, முகாமைத்துவத்திற்கு கீழ் செயற்பட்டமை, மற்றவர்களின் சைகைகளை அவதானித்தமை, பாடல்களை கிரகித்துக்கொண்டமை, அதற்கேற்றால் போன்று தம்மை ஈடுபடுத்திக்கொண்டமை, வாத்தியங்களை இசைத்தமை, உடலங்கங்களின் சுறுசுறுப்பான செயற்பாடு போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டமையின் பயனாக மாணவர்களிடையே பல்வேறான ஆளுமைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இச்செயற்பாடுகளை நினைத்துப் பார்க்கும் போது, கடினமானதாக தென்பட்டாலும், இதனை மகிழ்ச்சிகரமான மனநிலையோடு மாணவர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )


# “அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கள்” - அறிந்திருக்க வேண்டிய கதை

## கார்த்திகை தீபமும் தீபாவளியும் கிட்டத்தட்ட ஒன்றே -- 2



போனகிழமை தீபாவளி பற்றிப் பார்த்த உங்களுக்கு, அதற்கும் முன்பிருந்தே தமிழர் மத்தியில் ஒரு விழா புகழ்பெற்று விளங்கியிருந்தது என்றும், தற்போதும் அது கொண்டாடப்படுகிறது என்றும் சொல்லியிருந்தோம். சித்திரைப்புத்தாண்டு, தைப்பொங்கல் பற்றிய குறிப்புகள் கூட திருத்தமாகச் சொல்லப்படாத சங்க இலக்கியங்களில், இந்த விழா சொல்லப்பட்டிருக்கின்றது என்பதும், தமிழர் மத்தியில் நீண்ட நாட்கள் கொண்டாடப்படுகின்ற ஒரேயொரு விழா இது மட்டுமே என்றும் சொன்னால், அது பெருமையாகத்தான் இருக்கும். அது வேறொன்றுமில்லை. அந்தத் தமிழரின் திருநாளை நீங்களும் கூடிய விரைவில் கொண்டாடத் தான் போகிறீர்கள். ஆம். அடுத்த கிழமை வரப்போகின்ற கார்த்திகை விளக்கீடே தான்.

கார்த்திகை மாதத்தில் பூரணை வருகின்ற நாள், அல்லது அதற்கு முன் பின்னான நாள், கார்த்திகை நட்சத்திரமாகவே இருந்து வருகிறது. அதனால் தான் இந்த மாதத்துக்கே கார்த்திகை என்று பெயர். இந்தக் கார்த்திகையில் தான் விளக்கேற்றி வழிபாடுகளை நிகழ்த்துகிறோம். வீட்டுச்சுவர், மதில், திண்ணை என்பவற்றில் அகல் விளக்கேற்றியும், வீட்டு வாசல்கள், ஆலய முன்றல்களில் சொக்கப்பனை எரித்தும், வீட்டு வளவு முழுவதும் தற்காலிக ஈர்க்கு விளக்குகளை நட்டும் ஒளிமயமாகக் கொண்டாடுகிறோம்.



அன்று தின்பண்டங்கள் செய்து இறைவழிபாடு செய்வதும், இறந்து போன முன்னோரை நினைவுகூர்வதும் வழக்கமாக இருக்கிறது. எங்கள் ஊரில் எல்லாம், இறந்தோருக்குப் பிரியமான எண்ணெயில் செய்த பலகாரங்களை அன்று படையல் செய்யவேண்டும் என்பதும், பல்லி சத்தமிட்ட பின்னரே அந்தப் படையலை எடுத்து உறவினருடன் பகிர்ந்து மகிழவேண்டும் என்பதும் இன்றும் மரபாக நிலவி வருகின்றது.

முன்பே சொன்னது போல கார்த்திகை விளக்கீட்டுக்கு நீண்ட வரலாறு உண்டு. சங்க இலக்கியங்களில் அகநானூறு, நற்றிணை முதலான நூல்களில், கார்த்திகையில் விளக்கீடு கொண்டாடப்பட்டதற்கான சான்றுகளைக் காணலாம். அகநானூற்றின் 141ஆம் பாடலில், கணவனைப் பிரிந்திருக்கும் தலைவி வானை நோக்குகிறாள்.

“வானத்தில் மழையைக் காணவில்லை. முயல் என்று நாமெல்லாம் சொல்லும் களங்கம் நிலவில் பளிச்சிட்டுத் தெரிய பூரண நிலவு கார்த்திகை நட்சத்திரத்தை நெருங்குகிறது. எல்லோரும் விளக்கேற்றி வைத்து மாலை தூக்கி தோரணம் கட்டுகிறார்கள். என்னோடு இப்பொழுதைக் கொண்டாடவாவது அவர் வரவேண்டுமே” என்று பெருமூச்செறிகிறாள்.

மைங்கணான் மகிழறிவன்

கார்த்திகை நட்சத்திரம் இப்பாடலில் “அறுமீன்” என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. “”கார்த்திகை மாதம் போனால் கடும் மழை இல்லையே” என்ற திரைப்படப் பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறதா? இன்றைக்குத் தான் காலமே மாறிவிட்டதே! ஆனால் அந்தத் திரைப்படப்பாடல் வரிகள் குறிப்பிட்ட பழைய வழக்கத்தைத் தான் “வானில் மழை வரும் அறிகுறி இல்லை” என்று சொல்கிறாள் தலைவி. கார்த்திகைப் பூரணையில் விளக்கேற்றி, மாலை தோரணம் கட்டித் தமிழர் கொண்டாடினர் என்பதற்கான மிகப்பழைய சான்றுகளில் ஒன்று இது.

நற்றிணையின் 202ஆம் பாடலில் தலைவனும் தலைவியும் வீட்டை விட்டு ஓடிப்போகிறார்கள். அவளது கவலையைப் போக்குவதற்காக பாதை நெடுகிலும் “புதினம்” காட்டிச் செல்கிறான் தலைவன். வீதியோரம் கோங்கு மரங்கள் பூத்துக்குலுங்குகிறது. அதைக்காட்டி “உன் தந்தை பல தருமகாரியங்கள் செய்யும் கார்த்திகைத் திங்களில் வரிசையாகச் செல்கின்ற தீபங்கள் போல பல கோங்க மலர்களைச் சூடி நிற்கும் இக்காட்டைப் பார்” என்கின்றான் தலைவன். கார்த்திகை விளக்கீட்டை இப்பாடலில் “அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கள்” என்று பாடுகிறார் புலவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ. “கார்த்திகை விளக்கீடு” என்ற சொல்லை முதலில் தமிழிலக்கியத்தில் பயன்படுத்தியவர் சம்பந்தர். மயிலையில் பூம்பாவையை உயிர்ப்பித்த பதிகத்தைப் பாடும்போது, விளக்கீடு காணாமல் போதியோ பூம்பாவாய் என்று பாடுகின்றார் அவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான கார் நாற்பது இதைக் “கார்த்திகைச் சாறு” (சாறு = விழா) என்று பாடியிருக்கிறது. திருவண்ணாமலை உச்சியில் கார்த்திகை விளக்கீடு பற்றி சீவக சிந்தாமணி “குன்றில் கார்த்திகை விளக்கீட்டென்ன” என்று பாடுகிறது. இன்னும் தொல்காப்பியத்தில் வருகின்ற “வேலி நோக்கிய விளக்கு நிலையும்” (பொருளதிகாரம் புறத்திணையியல், 35) என்ற வரிகளுக்கு கார்த்திகை விளக்கு என்று விளக்கம் சொல்கிறார் நச்சினார்க்கினியர். இதெல்லாம் கார்த்திகை விளக்கீட்டின் பழைமையையும் புகழையும் விளக்கப் போதுமானவை.

தீபாவளி தமிழர் மத்தியில் பிற்காலத்திலேயே அறிமுகமானது என்றும், ஆனால் கார்த்திகைக்கு மிக நீண்ட வரலாறு உண்டு என்றும் பல தடவை சுட்டிக்காட்டியிருக்கிறோம். உண்மையில் இவை இரண்டுமே ஒரே மூலத்தைக் கொண்டவை தான். தீபாவளி கொண்டாடப்படவேண்டிய திதி, ஐப்பசி மாத பதினான்காம் தேய்பிறை. கார்த்திகை கொண்டாடப்படவேண்டிய திதி, கார்த்திகை மாத பூரணை. இரண்டு நாட்களுக்கும் கணக்கிட்டால் பெரும்பாலும் பதினைந்து நாள் வித்தியாசமே வரும். ஒரு மாத இடைவெளிக்குள், அமாவாசையில் கொண்டாடப்பட்ட தீபவிழாவும், பூரணையில் கொண்டாடப்பட்ட தீபவிழாவும் முறையே தீபாவளியாகவும், கார்த்திகையாகவும் மாறி வளர்ச்சி கண்டிருக்கின்றன என்பதே உண்மை. இதற்கு இன்னொரு சான்றாக, நமது ஐப்பசி பதினான்காம் தேய்பிறைக்குப் பதில், தமிழகம் தவிர்ந்த அனைத்து இந்தியப்பகுதிகளிலும், ஐப்பசி அமாவாசையிலேயே தீபாவளி கொண்டாடப்பட்டுவருகிறது என்பதைக் காணலாம். இரண்டு விழாக்களும் ஒன்று தான் என்பதற்கு இன்னொரு வலுவான சான்றும் உள்ளது. மலையகத்தமிழருக்கு இன்றும் தீபாவளி முன்னோர் வழிபாட்டு நாள்தான். பண்டிகை, கொண்டாட்டங்களுக்கு மேல் அதுவே தீபாவளியன்று முதலிடம் பிடிக்கின்றது. கார்த்திகையும் அதே முன்னோர் வழிபாட்டு நாள் தான் என்பதை நாம் இன்றும் காண்கிறோம்.

சரி, இரண்டும் ஒரே பண்டிகை தான் என்றால், இரு வேறு தினங்கள் எப்படி வந்திருக்கின்றன? ஒன்று பூரணை, ஒன்று அமாவாசை, ஒரே விழா எப்படி இரு வேறு சம்பந்தமில்லாத நாட்களுக்கான விழாக்களாக உருத்திரிந்திருக்க முடியும்?

போன கிழமைக் கட்டுரையை எப்படி ஆரம்பித்தோம் என்பது நினைவில் இருக்கிறதா? ஒரு விழாவுக்கு புவியியல் பிரதேசம் முக்கியமான காரணியாக அமைகின்றது. சில இந்திய நாட்காட்டிகள் மாதத்தை அமாவாசையிலிருந்து தொடங்க, இன்னும் சில நாட்காட்டிகள் பூரணையிலிருந்தே மாதத்தை ஆரம்பிக்கின்றன. நாம் தமிழில் இது இரண்டின் படியும் இல்லாமல் சூரிய வழியில் மாதத்தைக் கணிக்கின்றோம். என்றாலும், பாரம்பரியமாக நாம் கொண்டாடிவந்த சந்திரன் வழியிலான பண்டிகைகள் இன்றும் தொடர்கின்றன.

அமாவாசையில் மாதம் தொடங்குவோர் அந்நாளிலும், பூரணையில் மாதம் தொடங்குவோர் பூரணையிலும் கார்த்திகை விளக்கீட்டைக் கொண்டாடி வந்திருக்கின்றனர். அல்லது, பாவை நோன்பு போல அது மாதம் முழுவதும் கொண்டாடப்பட்ட நோன்பாகவும் இருந்திருக்கலாம். அப்படித்தான் அது வடக்கே தீபாவளியாகவும் நம் மத்தியில் கார்த்திகை விளக்கீடாகவும் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் நமக்கு தீபாவளி அறிமுகமானதுடன், பேசாமல் அதையும் கொண்டாடத் தொடங்கி விட்டோம். தீபாவளி பற்றிய மிகப்பழைய குறிப்புகளில் ஒன்று இலங்கையிலும் கிடைத்திருக்கிறது. 13ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் எழுந்த சரசோதிமாலை நூல். அதில் “பிதிர்கள் இன்பமுறு தீபாவலி” என்று தான் தீபாவளி சொல்லப்பட்டிருக்கிறது. அப்போதும் அது முன்னோர் வழிபாட்டு நாளே தான் என்பதை நாம் ஊன்றிக்கவனிக்கவேண்டும்.

கார்த்திகை விளக்கீடு, இன்று தமிழரால் மாத்திரமே கொண்டாடப்படும் பண்டிகை. தாய்லாந்திலும் கேரளத்திலும் கூட இவ்விழா கொண்டாடப்பட்டிருக்கிறது என்றாலும், அதுவும் பழந்தமிழ் தொடர்பு காரணமாகவே. தீபாவளி மவுசின் முன்னிலையில் நாம் நம் எஞ்சியிருக்கும் மிக நீண்ட பாரம்பரியத்தை மறுதலித்து வருகிறோம். அதற்காக ஏற்கனவே இந்துத்திருவிழாவாக புகழ்பெற்றிருக்கும் தீபாவளியைக் கைவிடுவதோ, புறக்கணிப்பதோ சாத்தியமல்ல. அதற்கும் மேல், ஆரியப்பண்டிகை, போலிக்கதை

தொடர்ச்சி... (பக்கம் -15 )







# நீரிழிவு நோயுள்ள பெண்கள் புகைத்தால் ஆபத்து அதிகம்

சர்க்கரை நோய் அல்லது இரத்த அழுத்தமுள்ள பெண்கள் புகைப்பிடித்தால், அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு ஆண்களைவிட அதிகமுள்ளதாக பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

ஆண்களுக்கு அளிக்கப்படும் அதே சிகிச்சையும், புகைப் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஆதரவும் பெண்களுக்கும் வழக்கப்பட வேண்டுமென்று பிஎம்ஜே என்ற சஞ்சிகையில் வெளியாகவுள்ள அந்த ஆராய்ச்சி முடிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண் நோயாளிகள் ஆபத்தில் சிக்குவதற்கு முன்னரே அவர்களை அடையாளம் காண்பதில் மருத்துவர்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்று அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 40-69 வயதுக்குட்பட்ட பிரிட்டனை சேர்ந்த ஐந்து லட்சம் பேரின் உயிரியல் வங்கித் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஏழு வருட காலத்தில் 5,081 பேருக்கு முதல் முறையாக மாரடைப்பு ஏற்பட்டது. அதில் மூன்றில் ஒருவர் பெண்ணாக இருந்தார்.



அனைத்து வயது ஆண்களுக்கு ஏற்படுவதைவிட பெண்களுக்கு குறைந்தளவே மாரடைப்பு ஏற்பட்டாலும், சில ஆபத்து காரணிகள் பெண்களில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துவது தெரியவந்துள்ளது.

புகைப்பிடிக்காத பெண்களை விட புகைப்பிடிக்கும் பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுத்துவதற்கு மூன்று மடங்கு வாய்ப்பிருப்பதாக இந்த ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால், ஆண்களில் இரண்டு மடங்கு மட்டுமே ஆபத்தை கூட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு மாநகரசபை

## சிங்கப்பூர் பிரதி உயர்ஸ்தானிகர் மட்டக்களப்பு வருகை





மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் அவர்களின் அழைப்பின் பேரில் சிங்கப்பூர் பிரதி உயர்ஸ்தானிகர் அமீர் அஜ்வாத் அவர்கள் மட்டக்களப்பு மாநகரசபைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

கழிவகற்றல் விடயங்களில் மட்டக்களப்பு மாநகரசபை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகவும், அவை தொடர்பில் சிங்கப்பூர் அரசின் அனுகுமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. மேலும் மட்டக்களப்பு மாநகரசபையின் தேவைகளைப் பூர்த்தி செய்யச்செயற்படும் பணியாளர் சிரமங்களைக் குறைத்து, துரித மற்றும் இலகுவான சேவைகளை வழங்கும் நோக்கில் சிங்கப்பூர் தகவல் தொழிநுட்பம்சார் நிறுவனங்களின் உதவிகளை எதிர்காலத்தில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்டு. மாநகரசபைக்குப் பாராட்டும் வேண்டுகோளும்



பொது மக்களுக்கு பாதை ஒரு அத்தியாவசிய தேவை. இதை சரிவர நிறைவேற்றுவது மிகவும் முக்கியமான விடயமாகும். மாநகர சபையும் வீதி அதிகார அபிவிருத்தி சபையும் இணைந்து கொங்கிறீட் பாதைகள் அமைத்து வருகின்றன. இது மிகவும் வரவேற்கத்தக்கது. இருந்த போதிலும் கொங்கிறீரட் பாதைகள் அமைக்கும் போது வடிகால் அமைப்புகளை பெரும்பாலும் கவனத்தில் கொள்வதில்லையோ என எண்ணத்தோன்றுகிறது.

அதேபோல் இவ்வாறு அமைக்கப்பட்ட சிறிய பாதைகளில் தொடர்ந்து கனரக வாகனங்கள் செல்வதால் பாதைகள் பாதிப்புக்குள்ளாகுகின்றன. இதனை கனரக வாகனங்கள் செல்வதை தாங்கக்கூடிய கட்டமைப்பை செய்வதால் தடுக்க முடியும். மேலும் சில சிறிய வீதிகள் தனி கிறவல், களி கலந்த மண்ணைக் கொட்டி அமுத்தி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட வீதிகள் மழைகாரணமாக (மழை விட்ட பிறகும் நீர் தேங்கி நிற்கிறது) சேறும் சகதியுமாகவுள்ளன. பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலகம் செல்வோர் என அனைவரும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.
மக்களில் நலனைக் கருத்தில் கொண்டு மட்டு. மாநகரசபை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சிறுவர் பூங்காக்களின் பராமரிப்பற்ற நிலை



மட்டு மாநகரசபையின் கீழ் 6 சிறுவர் பூங்காக்கள் உள்ளன ஆரம்பத்தில் ஒருசீராக பராமரிக்கப்பட்டபோதும் இப்போது அவை பராமரிப்பற்று விடப்பட்டுள்ளன.

இதுபற்றி பூங்காவிலிருந்த பெற்றோரிடம் வினவிய போது அவர்கள் பெரும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.
மேலும் அவர்களின் பொதுவான கருத்து, பிள்ளைளை தாங்கள் அழைத்து



வந்தாலும் அவர்கள் சுதந்திரமாக விழையாட விட முடியவில்லை, காரணம் பூங்காவில் அமைந்துள்ள விழையாட்டு சாதனங்கள் உடைந்தும், பலம் இழந்தும் பாவனைக்கு ஏற்றதாக இல்லை என்பதாகும்.

பிள்ளைகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். ஒரு நலன்விரும்பி குறிப்பிடுகையில் 'கல்லடிப்பாலத்திற்கு அண்மையில் அமைந்துள்ள "மீன் இசை சிறுவர் பூங்கா" மட்டக்களப்பு சிறுவர்ளை மாத்திரம் கவரவில்லை பிறமாவட்டங்ளில் இருந்து சுற்றுலாவரும் பிற சமுகத்தினரையும் கவர்ந்த ஒன்று. இப்பூங்காவின் வடிவமைப்பாலும் அதில் பொருத்தப்பட்ட சூரியஒளி மின்குமிழ்களாலும் சிறுவர்கள் இரவு 10-11 மணிவரை அங்கு விளையாடுவதை காணக்கூடியதாக இருந்தது. ஆனால் சிலமாதங்களாக இப்பூங்கா உடைபட்ட நிலையில் உள்ளது' என்று தனது கருத்தை ஆதங்கத்தோடு தெரிவித்தார் இந்தப் பூங்காவில் ஆரம்பத்தில் கட்டணம் அறவிடப்பட்டுடம் பிறகு சில விளையாட்டு சாதனங்கள் உடைந்ததால், கட்டணம் அறவிடுவது நிறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் கட்டணம் நிறுத்தப்பட்டமை மாநகர சபைக்கு வருமான இழப்பு. மறுபுறம் சிறுவருக்கு விளையாட பாதுகாப்பான இடம் இல்லை. இந்த குறைபாடுகளை கருத்தில் எடுத்து மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**லியோண்**

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

மட்டக்களப்பின் இந்து மதம் என அழைக்கப்படும் மதத்தின் நான்கு முகங்களும் மட்டக்களப்பின் அரசியல் சமூக வரலாறும் வரலாற்றுக்கூடாகவே மட்டக்களப்பின் சமுக அமைப்பும் அதனைத் தாங்கி நின்ற பொருளாதார அமைப்பும் அதனடியாக எழுந்த பண்பாடும் உருவாகி மாற்றம் பெற்று வந்துள்ளன. இவ்வகையில் மட்டக்களப்பு வரலாற்றை புராதன பொருளாதார காலம், அதன்பின், காடு வெட்டி வயல் செய்து நிலைபதியாக வாழ்ந்த நிலப்பிரபுத்துவ பொருளாதார காலம், அதன் பிறகு அந்நியர் வருகையின் பின் ஏற்பட்ட முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் காலம், அதைத் தொடர்ந்து வந்த பல்தேசியக் கம்பனைகளின் இன்றைய கோப்ரேட் பொருளாதாரக்காலம் எனப் பிரித்து நோக்கலாம். மட்டக்களப்பில் இந்துமதம் என அழைக்கப்படும் மதங்களின் வழிபாட்டு முறைகளையும் தெய்வங்களையும் வரலாற்று ரீதியாக நான்கு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம் அவையாவன.

1) பூர்வீக மதமும், பூர்வீக குடிகளின் வழிபாடுகளும், வழிபாட்டு மொழியும் ( இதுஆரம்பகாலம்)

2) காலத்திற்குக் காலம் .குடியேற்றங்கள் ஏற்பட்ட போது அக்குடிகள் கொணர்ந்த மதமும், வழிபாடுகளும், வழிபாட்டு மொழியும். (இது இடைக்காலம்)

3) ஆரியத் தெய்வங்களும், பிராமணீய வருகையும், அவை கொணர்ந்த வழிபாட்டு முறைகளும், வழிபாட்டு மொழியும்(இதுபிற்காலம் 12 ஆம் நூற்றாண்டின் பின்)

4) நவீன யுகத்தில் செல்வாக்குப்பெற்ற நவீன இந்து மதங்களும் தெய்வங்களும் வழிபாட்டுமுறைகளும்.(இது தற்காலம்)

1 பூர்வீக மதமும் பூர்வீக குடிகளின் வழிபாடுகளும் வழிபாட்டு மொழியும் (ஆரம்பகாலம்)

இப்பூர்வீக மதம் இங்கு எற்கனவே இருந்த பூர்வ குடிகளினால் வணங்கப்பட்ட தெய்வங்களான மாறா, வதனமார், குமாரத்தன், தெவுத்தன், குரிவிலிமுந்த, எரிகணுமுந்த என இந்து மதம் கூறாத மிகப்பழைய தெய்வங்களையும் அவை சார்ந்த வழிபாடுகளையும் கொண்டிருந்தது. இவற்றிற்கான வழிபாட்டிடம் அல்லது கோவில் ஊரின் ஒரு புறத்தில் அல்லது ஊரிலிருந்து அருகிலிருந்த காட்டுப் பகுதியில் அமைந்திருந்தது.

கோவிலுக்கான நிரந்தரக் கட்டிடங்கள் இருக்கவில்லை. இக் கட்டிடம் மரத்தடி அல்லது கொத்துப் பந்தல் (இலை குழை மரங்கள் கொண்டமைக்கப்பட்டது) அல்லது பந்தல் வடிவிலமைக்கப்பட்ட கோவில்களே ஆகும்



## வழிபாட்டு முறை

இதன் வழிபாட்டு முறை வேண்டுதலாகும். இன்னொரு வகையிற் சொன்னால் மன்றாட்டாகும். தங்களை மீறிய அந்தச் சக்தியை வா வா எனஉள்ளம் உருகி மன்றாட்டமாக உரிமையுடன் அழைத்து, ஆடியும் பாடியும் பொங்கி, அப்பொங்கலையும் பழங்களைக் கொண்டு தயாரித்த பாணக்கம் எனும் கூழையும் இவற்றிற்கு முன் படைத்தலும் அந்தச் சக்தியுடன் நேரடியாக உறவாடி அதன் மூலம் தமக்கு வளத்தைப் பெறலும் நோய் தீர்த்தலும். இறுதியில் அப்படையலை அனைவரும் சேர்ந்து பகிர்ந்து உண்ணுதலுமாகும். இதுவோர் கொண்டாட்டமாகும் உலகெங்கணுமுள்ள பூர்வ குடிகளின் வழிபாடு இது.

இன்று மிகப்பிரசித்தமாகி பெரு விழாக்கள் கொண்டாடும் மட்டக்களப்பின் தென்பகுதியில் அமைந்துள்ள





கதிர்காமக் கந்தன் கோவில், திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவில், என்பனவும் மட்டக்களப்பின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள மண்டூர்க் கந்தசாமி கோவில் கொக்கட்டிச் சோலை தாந்தோன்றீஸ்வரன் கோவில் போன்றனவும் மட்டக்களப்பில் உள்ள அமிர்தகளி மாமாங்கப் பிள்ளையார் கோவிலும் மட்டக்களப்பின் வடதிசையில் அமைந்துள்ள சித்தாண்டிக் கந்தசுவாமிகோவில், பாற்சேனை குமாரத்தன் கோவில், வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவில் போன்ற பெரும் கோவில்கள் யாவும் இப்புராதன வேட இனமக்களால் பண்டைய முறைப்படி வழிபாடு செய்யப்பட்ட பண்டைய வழிபாட்டிடங்களாகும். தெற்கே கதிர்காமத்திலிருந்து ஒருகோட்டை வடக்கே வெருகல் வரை கீறினால் அக்கோட்டின் வழியில் வரும் அத்தனை முக்கிய பழைய கோவில்களும் வேடரின் குமாரத்தன் கோவிலாகவும் வழிபாடுகளாகவும் இருந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் ஊகம். /அவை பின்னால் ஏற்பட்ட குடியேற்றங்கள் அதனால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள் காரணமாகவே இன்றைய பிராமணீய பூசை வழிபாட்டு முறைகளுக்குள் வந்தன. பின்னர் இவைமுழுக்க முழுக்க பிராமணீய சமஸ்கிருத மேலாதிக்கத்தின் கீழ்ச் சென்றும் விட்டன. அதற்கான காரணங்கள் அன்றைய பொருளாதார மாற்றத்திலும் அரசியல் மாற்றத்திலும் தங்கியுள்ளன. இதில் பாற்சேனை குமாரத்தன் கோவில் மாத்திரமே இன்றும் பழங்குடிகளிடமுள்ளது. ஏனைய கோவில்கள் கைமாறி குடியேறியோர் வசம் சென்று பல மாற்றங்களைப் பெற்றும் விட்டன.


## வழிபாட்டிற்குரிய பொருட்கள்

பண்டைய கோவில்களில் வழிபாட்டிற்குரிய பொருட்களாக அன்று சிலைகள் இருக்கவில்லை. சிலைகளை உருவாக்கும் தொழில்நுட்பம் ஏற்படாத காலம் அது. சிலைக்குப் பதிலாக அப்புராதன மக்கள் பாவித்த வில் அம்பு, மாடுகட்டும் பெரும்கயிறு, மரத்தின் மேல் அமைக்கப்பட்டு துணி ஆடை அணிவித்த சிறிய வேல் என்பனவே இருந்தன. ( இவைஇன்றும் அவர்களிடம் வழக்கிலுண்டு). இவற்றிற்கான துதிப்பாடல்கள் தனித்துவமானவை. இது தமிழும் வேட பாசையும் கலந்ததாக இருக்கும். முன்னர் தனிஒரு பூசாரி இருக்கவில்லை பல பூசகர்கள் சேர்ந்து இச்சடங்குகளை நடத்தினர் போலத் தெரிகிறது( இவ்வழக்கம் இன்றும் உண்டு)

## வழிபாட்டு முறைகள்

அவர்களின் புராதன வாழ்க்கையான வேட்டை ஆடுதல்,தேனெடுத்தல், தேன் பூச்சி விட்டல், மாடு பிடித்தல், எருமை பிடித்தல், யானை பிடித்தல் என்பனவற்றை மீளச்செய்யும் சடங்காக அச்சடங்குகள் இருந்தன. இதன் எச்ச சொச்சங்களை இன்றும் அவ்வழிபாட்டில் காணலாம் (மறா வதனமார் சடங்குகளில் இவை இடம் பெறும்) துதிப்பாடல்கள் அவர்களுக்குரிய பேச்சுமொழியில் அமைந்திருந்தன. வாத்தியம் கொட்டு எனஅழைக்கப்பட்ட பறையாகும் அலங்காரம் தென்னோலை, இலை, குழைகள், வில், அம்பு, தடி பொல்லு என்பன( வைரவன் பொல்லு இன்றும் பாவிக்கப்படுகிறது)

இத் தெய்வங்களுக்கும் பின்னாளில் வந்த சிறுதெய்வங்களான மாரி காளி கண்ணகி வைரவர் போன்ற சிறு தெய்வங்களுக்கும் அதன் பின்னர் வந்த சிவன், பார்வதி விஸ்ணு, முருகன், பிள்ளையார், போன்ற பெருந்தெய்வங்களுக்குமிடையே எந்த வித உறவுகளும் முன்னாளில் இருக்க வில்லை. இத்தகைய புதிய தெய்வங்களை




வழிபாட்டுமுறைகளை அப்புராதன குடிகள் அன்று அறிந்திருக்கவுமில்லை. இத்தகைய வழிபாட்டு முறைகளை இன்றும் வேடர், வேட வெள்ளாளர் எனத் தங்களை அழைத்துக்கொள்ளும் குடிகளிடையே கிராமங்களில் காணலாம். அவர்கள். மிகுந்த சிரமத்தின் பேரிலேயே இவ்வழிபாடு முறைகளை இன்றும் பேணுகிறார்கள்.

பின்னால் வந்த சில வழிபாட்டு முறைகள் இவர்களின் புராதன வழிபாட்டில் செல்வாக்குச் செலுத்தினாலும் தமது பழைய முறைகளை இவர்கள் பிடிவாதமாகச் செய்து வருகின்றனர். பெரும் கோவில்களாகிவிட்ட சித்திரவேலாயுதசாமி கோவில், மண்டூர்க் கந்தசமிகோவில் என்பனவற்றில் இவர்களின் இப்பண்டைய வழிபாடுகள் இன்றும் இருப்பது நமது இந்தக் கூற்றை வலுப்படுத்தும். இவ்வழிபாடுகள் பற்றியும் வழிபாட்டுமுறைகள் பற்றியும் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அவ்வழிபாட்டை இற்றைவரை தக்கவைத்திருக்கும் அம்மக்கள் பற்றியும் ஆழமான ஆய்வுகள் இதுவரை நடைபெறவில்லை. பின் வரும் அத்தியாயங்களில் இவ்வழிபாட்டு முறைகள் விபரமாகத் தரப்படுகின்றன

**கண்ணுக்குத் தெரியாத தங்கச் சுரங்கமொன்று மானிடவியலாளர்களையும் வரலாற்று வல்லுனர்களையும் எதிர்பார்த்தபடி மட்டக்களப்பில் கிடக்கிறது**

முதன் முதலில் இவ்வழிபாடுகள் ஆய்வுக்குரிய பொருளாக அமைந்ததும் கல்வியுலகில் அறிமுகம் செய்யப்பட்டதும் 1980 களில்தான்.

(தொடரும்)

# மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி - சில அவதானங்கள் 3

பேராசிரியர் செ. யோகராசா



அடுத்து கவனிப்பதற்குரியது தொழில்சார் கல்வி மறுப்பாகும் திண்ணைப் பள்ளிக் கல்வியை விட பரந்துபட்ட நிலையில் சாதாரண மக்கள் பலராலும் பயிலப்பட்டு வந்ததொன்றாக இத்தொழில் சார்கல்வி அமைந்துள்ளது.

வைத்தியம், சோதிடம், மாந்திரீகம், கொல்லு வேலை, தச்சு வேலை, மாட்டுவைத்தியம், யானை வைத்தியம், கப்பல் கட்டும் கலை, நடனம், கூத்து, இசை, நகைத் தொழில் முதலானவை இத்தொழில்சார் கல்வியில் முக்கியம் பெற்றுக்காணப்பட்டன.

மேற்கூறிய தொழில்சார் கலைகள் குடும்ப நிலையில் தந்தை-மகன் முறையில் பரம்பரை பரம்பரையாக கற்பிக்கப்பட்டு வந்தன. சில கலைகளில் (எ-டு : மாந்திரிகம்) குரு பெருமதிப்பிற்குரியவராக விளங்குகிறார், இவ் வழி வைத்திய ஏடொன்றில்,

" குரு இருந்த இடத்தில் குந்திக்கால் நீட்டேன் அருகிலிருந்து ஆசாரம் பண்ணுவேன் மற்றவர் காலில் செருப்பெடுப்பேன் கற்ற வித்தை முற்றும் பெறுவேன் "

என்றவாறமைந்துள்ள பாடல் நினைவு கூறத்தக்கது. முற்குறிப்பிட்ட தொழில்சார் கலைகளுள் வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் என்பன பற்றியே அதிகளவு அறியமுடிகிறது.

வைத்தியத்தைப் பொறுத்தவரையில் இத்துறையில் விசக்கடி வைத்தியம் சிறப்பிடம் பெற்றிருந்தது.

பாம்பு ஒருவருக்கு தீண்டிவிட்டது என்ற செய்தியைக் கொண்டுவரும் தூதனைக் கண்ட மாத்திரத்தில் மட்டுமின்றி அவன் சொல்லும் முதல் வசனத்தைக் கொண்டும் தீண்டியது விடப்பாம்புதானா என்பதனையும் அவ்வாறெனின் கடியுண்டவர்பால் ஏறியுள்ள விடத்தின் அளவு என்ன என்பதனையும் குறித்த நோயாளிக்கு அது காலக்கடியா (மரணத்தை உண்டாக்க வல்லதும், நோயிலிருந்து மீட்க முடியாததுமான பாம்புக்கடி) அல்லது சுகப்படுத்தக் கூடியதா என்பதனையும் தீண்டிய விடப்பாம்பு என்ன இனத்தைச் சேர்ந்தது என்பதனையும் இலகுவில் தீர்மானிக்கவல்ல பாம்புப் பரிசாரிமார் மட்டக்களப்புத் தமிழகத்தில் உள்ளனர் என்பார் ஆய்வாளர் ஒருவர், பாம்புக்கடி வைத்தியம் பற்றி நன்கு விளக்கும் சித்தர் ஆருட நொண்டிச்சிந்து முதலான நூல்கள் இன்றுமுள்ளன.

சோதிடர்கள் பலர் மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்துள்ளார்கள் மட்டக்களப்பு நாட்டார் பாடல்களில் சோதிடச் செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் இத்தகைய சோதிடக்கலை வல்லுநர் மரபில் வந்தவரான வ.கனகரத்தினம் என்பவர் சில வருடங்களிற்கு முன்னர் - "சோதிட இரத்தின சேகரம்" என்றொரு நூலினை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

மாந்திரீக அல்லது மந்திரக்கலைப் ஏட்டு சுவடிகள் மட்டக்களப்பு பிரதேசத்தில் இன்றும் பல வீடுகளில் காணப்படுகின்றன. இம்மந்திரங்கள் விஷம் ஏறாமல் தடுத்தல், பேயோட்டுதல், சுகப்பிரசவம் நடைபெறச் செய்தல் முதலான நல்ல காரியங்களுக்குப் பயன்பட்டு வந்த அதேவேளையில் சூனியம் வைத்தல், பிரிவினை செய்தல் முதலான தீய காரியங்களுக்கும் பயன்பட்டு வந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

தொழில்சார் கலைகள் சிலவற்றில் தொழில் ரீதியான விடயங்கள் பேணப்படுவதிலே இரகசியமுறை கடைப் பிடிக்கப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக வைத்திய ஏட்டுப் பிரதியொன்றிலே மூலிகைகள் சிலவற்றிற்கு வழக்கமான சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்கள் பின்வருமாறு பயன்படுத்தி இருப்பதனைக் குறிப்பிடலாம்".

| வழமையான சொல் | பயன்படுத்திய சொல் |
|---|---|
| வேம்பு | நிம்பம் |
| முருங்கை | உளருரைமுதலி |
| காயத்தாள் | பட்டை |
| ஆடு தின்னாப்பாலை | தேட் கொடுக்கு |
| ஆனை வணங்கி | தேட் கொடுக்கு |

தொழில்சார் கலைகளுள் சில, இன்று முதியோரது நினைவுகளாக மட்டும் எஞ்சியுள்ளன. மூத்த ஆய்வாளரொருவர் இவ்வாறு கூறுகின்றமை மனங் கொள்ளற்பாலது. "என் இளமை பருவத்தில் நான் வாழ்ந்த தோட்டத்தில் ஐந்தாறு யானைகள் வேலை செய்தன. அந்தயானைகளுக்கு வைத்தியம் செய்ய ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார் யானைகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்கான ஆலோசனைகளைப் பெற என் தந்தையாரிடம் ஆனைக் கங்காணியார் அடிக்கடி வருவார். அப்பொழுது அவர் யானை வாகடத்தையும் தம் மடியில் கட்டிக்கொண்டு வருவார். அவ்வேட்டுப் பிரதியை நான் பலமுறை பார்த்துள்ளேன்,"

இனி, செவியேறல் முறைக்கல்வி பற்றிக் கவனிப்போம் கேள்வி ஞானத்தினூடாகப் பெற்றுக்கொள்ளுகின்ற பல் துறைசார் புலமையே செவியேறல் முறைக்கல்வி எனப்படுகின்றது. (முற்குறிப்பிட்ட கல்வி முறையைப் பெற்றுக் கொள்ளாத) பெரும்பான்மையினரான சாதாரண மக்கள் (முற்குறித்த கல்வி முறையைப் பெற்றுக் கொண்டவரும் அடங்கலாம்) பல்வேறு வழிகளில் கேள்வி ஞானத்தை பெற்று வந்துள்ளனர். (தொடரும்)

தொடர்ச்சி...

## ‘விவசாய பாதிப்புக்கள் குறித்து அறிவிக்கவும்’

பாதிப்புக்களை அறிக்கையிட வேண்டும். கிராம சேவையாளரிடத்திலும் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யலாம், பின்னர் விவசாயப் போதனாசிரியர்கள் மூலமாக இழப்புக்களை உறுதிப்படுத்தி கமநல சேவை நிலையத்திலும் அறிவிக்கலாம்.

இந்த விவர்களைத் தொகுத்து மாவட்டச் செயலகத்திற்கும் பின்னர் கமத்தொழில் அமைச்சுக்கும் சமர்ப்பிக்க விவசாய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள்.

இப்பொழுது ஏற்பட்ட அசாதாரண காலநிலை போன்றுதான் 2011ஆம் ஆண்டிலே அடைமழையும் பெருவெள்ளமும் ஏற்பட்டது.

அப்போது விவசாயிகளுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன. அந்த சேத விவரங்களை சரியான முறையில் திரட்டி நாம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருந்தோம், அதற்கான நிவாரணங்களை விவசாயிகள் உடனடியாகவே எதிர்பாரத்திருந்தார்கள். ஆனால், கால தாமதமானபோதிலும் இழப்பீடுகள் ஏதோ ஒரு வடிவத்தில் விவசாயிகள் திருப்தியடையும் அளவுக்குக் கிடைத்தன.

இழப்பீட்டுக்கான வேண்டுகோள்கள் முறைப்படி அமைந்தால் குளறுபடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் ஏமாற்றங்களைத் தவிர்ப்பதற்கும் இலகுவாக இருக்கும்.' என்றார்.




நூல் அறிமுகம்
நூல் : புகழ்பூத்த புலவர்மணி
தொகுப்பாசிரியர் : கலாநிதி சி.சந்திரசேகரம்
வெளியீடு : புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு
விலை : 400/=

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களைப் பற்றி மற்றையோர் பாடிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வெளியீடு 03.11.2018ஆந் திகதி மட்/ இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

புலவர்மணி அமரத்துவம் அடைந்த பொழுது அவரின் மறைவை ஒட்டிக் கவிஞர்கள் பலரால் பாடப்பட்ட அஞ்சலிக் கவிதைகள், கவியரங்குகளில் பாடப்பட்ட கவிதைகள், கவிதைப் போட்டிக் கவிதைகள் மற்றும் தனிக் கவிதைகள் என்னும் வகையில் அமைந்த கவிதைகளின் தொகுப்பாக இது அமைந்துள்ளது. இக்கவிதைகளைப் பாடியவர்களுள் சிலர் அமரத்துவம் அடைந்து விட்டார்கள். மற்றவர்கள் வாழ்கிறார்கள்.

“மூத்த தலைமுறை சார்ந்த ஆளுமைகள்மீது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கவிதைகள் பாடப்படுகின்ற மரபு எம்மிடம் உள்ளது. எனினும் அவற்றைத் தொகுத்து நூலுருவாக்கும் மரபு எம்மிடமில்லை. ஆறுமுக நாவலர் பற்றிய கவிதைகள் அவ்வாறு தொகுக்கப்பட்டு வந்த பின்னர் புலவர்மணி பற்றிய இத்தொகுப்பே வருகிறது. கிழக்கில் வரும் முதல் தொகுப்பும் இதுவே ஆகின்றது.” என்று இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய கலாநிதி செ.யோகராசா அவர்கள் தெரிவிப்பதிலிருந்து இத்தகைய தொகுப்பு முயற்சியில் நாம் தூ ரத்தே நிற்கிறோம் என்னும் செய்தி அவரால் எடுத்துக்காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றச் செயலாளர் திரு. பெ.சத்தியலிங்கம் அவர்களால் வெளியீட்டுரையும் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா அவர்களால் அணிந்துரையும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத் தலைவர் கலாநிதி சி.சந்திரசேகரம் அவர்களால் முன்னுரையும் இந்நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

‘பண்டுரு முகிற்குலங்கள்...’ என்னும் தலைப்பில் சுவாமி விபுலாநந்தர் பாடிய கவிதை முதலாவதாகவும் ‘புலவர்மணி புகழ் வாழ்க’ என்னும் தலைப்பில் கவிஞர் கலாபூ'ணம் கா.சிவலிங்கம் பாடிய கவிதை இறுதியாகவும் உள்ள இக்கவிதைத் தொகுதியில் 44 கவிதைகள் உள்ளன.

-பூனா

# கலித்தொகை இன்பம்

## அவரைக்கண்டதும் உள்ளம் தழுவத் துடிக்கிறதே!



கடந்த காட்சியிலிருந்து சற்று மாறுபட்ட காட்சியினை இந்த அத்தியாயத்தில் காணலாம். பரத்தையரோடு உறவாடிய கணவன் தன்னைத் தேடிவந்தபோது அவனைக் கடிந்து, இங்கே ஏன் வந்தாய் மீண்டும் அவர்களிடமே போ என்று மனைவி ஏசித் திருப்பியனுப்பிய நிகழ்வை முன்னைய காட்சியில் கண்டோம். இங்கே அதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு காட்சி நம்முன்னே வந்து நிற்கின்றது.

தலைவன் நாடாளும் மன்னவன். மதுரை அவனது நகரம். அங்கேயுள்ள வைகை ஆற்றின் இரண்டு கரைகளிலும் பூமரங்கள் செறிந்து அடர்ந்த வளர்ந்து நிற்கின்றன. அவை பூத்துக்குலுங்கி, ஆற்றிலே பூக்களைச் சொரிந்துகொண்டிருக்கின்றன. அதனால் பூக்களைச் சூடிக்கொண்ட ஒரு பெண் படுத்துக்கிடப்பதைப் போல அந்த ஆறு காட்சியளிக்கிறது. வைகை ஆறு மதுரை நகரைச்சுற்றி ஓடுகின்றது. அதனால் மதுரை நகரமே ஒரு பூமாலையை அணிந்து கொண்டிருப்பதைப் போலத் தோற்றம் அளிக்கிறது. அந்த நகரைப் பகைவர்கள் முற்றுகையிட்டதேயில்லை. வைகை ஆறுதான் மதுரையை முற்றுகையிட்டதைப் போல அதனைச் சுற்றி வட்டமிட்டு ஓடிக்கொண்டிருக்கின்றது.

அத்தகைய மதுரையின் மன்னனுக்கு பட்டத்து அரசியான தன் மனைவியை விட அழகிய பரத்தையர்கள்மேல் கொள்ளை ஆசை. அவன் அடிக்கடி பரத்தையர்களிடம் சென்று அவர்களோடு உல்லாசமாக இருப்பான். அவ்வாறு இருந்துவிட்டு, அவன் திரும்பி அரண்மனைக்கு வரும்போது அவனோடு கோபம் கொள்ளவேண்டும், அவனது தவறினைச் சுட்டிக்காட்ட வேண்டும், அவனோடு உறவாடாமல் ஆகக் குறைந்தது ஊடல் செய்தாவது அவனைத் திருத்தவேண்டும் என்று தலைவிக்கு அவளின் உயிர்த்தோழி அறிவுரை சொல்கிறாள். தோழியின் அறிவுரையைத் தலைவி ஏற்றுக் கொள்கின்றாள். ஆனால் தலைவன் - அந்த அரசன் - அரண்மனைக்குத் திரும்பி வந்து, தலைவியைக்காண அந்தப் புரத்திற்கு வரும்போது அவனைக் கண்டதும் தலைவியின் வைராக்கியம் அத்தனையும் தவிடு பொடியாகின்றன. அவள் மன்னனோடு எந்தவித தர்க்கமும் செய்யாமல் விருப்போடு அவனை வரவேற்கின்றாள். அவனது ஆசைக்கு இணங்குகின்றாள். அவனோடு கூடுகின்றாள்.

இதுபற்றி தலைவியைக் கடிந்த தோழி அவளது செய்கையை விமர்சிக்கின்றாள். தலைவி தோழியிடம் தன் நிலைமையை விளக்குகின்றாள். “அடியே தோழி! நான் என்ன செய்வேன்? அவர் எங்கேயிருந்து வருகின்றார் என்று எனக்குத் தெரியும். பரத்தையர்களோடு இன்பம் அனுபவித்த அடையாளங்களைக்கூட அகற்றாமல் அவர் வருகிறாரே என்பதையும் உணர்கின்றேன். அவரோடு கோபிக்க வேண்டும் என்றும் நினைக்கின்றேன். ஆனால் அவர் வந்ததும், அவரைக் கண்டதும் பாழும் என் நெஞ்சம் அவரோடு இணங்கிவிடுகிறதே. அவரைத் தழுவத் துடிக்கிறதே! நான் என்னதான் செய்யட்டும்? என்று கூறுகின்றாள்.

இந்தக்காட்சியை நம்முன்னே கொண்டு வந்த நிறுத்துகின்ற பாடல் இதோ:

கார்முற்றி, இணர் ஊழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து

சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்புஎய்தி - இருநிலம்

தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்

நீர்முற்றி மதில்பொருஉம் பகை அல்லால் நேராதார்

போர்முற் றொன்று அறியாத புரிசூழ் புனல்ஊரன்



நலத்தகை எழில்உண்கண் நல்லார்தம் கோதையால்

அலைத்த புண் வடுக்காட்டி அன்புஇன்றி வரின் - எல்லா

புலப்பேன் யான் என்பேன் மன்? அந்நிலையே அவற்காணின்

கலப்பேன் என்னும் இக்கையறு நெஞ்சே

கோடுஎழில் அகல்அல்குல் கொடியன்னார் முலைமூழ்கிப்

பாடுஅழி சாந்தினன் பண்பின்றிவரின் - எல்லா

ஊடுவேன் என்பேன்மன்? அந்நிலையே அவற்காணின்

**சட்டத்தரணி, பாடும்மீன்**
**சு.ஸ்ரீகந்தராசா**

கூடுவேன் என்னும் இக்கொள்ளைஇல் நெஞ்சே

இனிப்புணர்ந்த எழில்நல்லார் இலங்குஎயிறு உறாஅலின்

நனிச்சிவந்த வடுக்காட்டி நாண்இன்றிவரின் - எல்லா

துனிப்பேன்யான் என்பேன்மன்? அந்நிலையே அவற்காணின்

தனித்தே தாழும் இத் தனியில் நெஞ்சே எனவாங்கு, பிறைபுரை ஏர்நுதால்! தாம் எண்ணியவை எல்லாம் துறைபோதல் ஒல்லுமோ தூவாகாது ஆங்கே

அறைபோகு நெஞ்சு உடையார்க்கு? (கலித்தொகை, மருதக்கலி பாடல் இல: 2 பாடியவர்: மருதன் இளநாகனார்)

நேரடிக்கருத்து:

மழைக்காலத்தின் நடுப்பகுதி. வைகை ஆற்றிலே வெள்ளம் நிரம்பி ஓடிக்கொண்டிருக்கின்றது. அதன் இரு கரைகளிலும் உள்ள மரங்கள் பூக்களால் நிரம்பியிருந்தன. அதனால் பூச்சூடிய பெண்ணொருத்தி படுத்துக்கிடப்பதைப்போல அந்த ஆறு விளங்கியது. மதுரை நகரைச்சுற்றி இவ்வாறு வைகை ஓடுகின்ற காட்சி அந்நகரம் தனக்குப் பூமாலை அணிந்து கொண்டது போலக் காட்சியளித்தது. வைகை ஆற்று நீர் மதுரைநகரைச் சுற்றி முற்றுகையிட்டு, கோட்டையில் மோதிக் கிடந்ததே தவிர பகைவரோடு மோதவேண்டியதே இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. அத்தகைய நீர்வளம் நிரம்பப்பெற்ற மதுரையின் மன்னன் என் கணவன்.

அடி என் தோழி! நலம்மிக்க அழகிய மைதீட்டப்பட்ட கண்களை

உடையவர்களான பரத்தைப்பெண்கள் தமது கூந்தலினால் ஏற்படுத்திய காயத்தின் அடையாளங்களை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு என்மேல் அன்பில்லாமல் அவர் வந்திருந்தால் நானும் அவர்மேல் ஊடல்கொண்டிருப்பேன் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் அந்த நிலையிலும் அவரைக்கண்டுவிட்டால் அவரோடு கூடி இன்பமடைகிறேன். வேறென்ன செய்யமுடியும்?

அடி தோழி! இருபுறம் உயர்ந்த அழகிய அகன்ற உடலும்

கொடியிடையும் கொண்ட பரத்தையரின் மார்புகளுக்கிடையிலே கிடந்து விட்டுப் பண்பில்லாத முறையிலே அவர் வந்தால் அவரோடு ஊடவேண்டும் என்றதான் நான் நினைத்திருப்பேன். ஆனால் அவரைக்கண்டதும் கொள்கையில்லாத என் உள்ளம் அவரோடு கூடுவேன் என்கிறதே நான் என்னடி செய்யமுடியும்?

அடி தோழி! இனிமையான தன்மையோடு, அழகும் உடைய பரத்தையரின் பற்கள் தன் உடலில் பதித்த அடையாளங்களைக் காட்டிக்கொண்டு அவன் என்னிடம் வந்தால் அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கவேண்டும் என்றுதான் நான் நினைப்பேன். ஆனால் அந்த நிலையிலேகூட அவரைக் கண்டுவிட்டால் என்னைத் தவிக்க விட்டுவிட்டுத் தன்போக்கிலே சென்று அவனது விருப்பத்திற்க இணங்கிவிடுகிறதே எனது நெஞ்சு?

பிறைபோன்ற அழகிய நெற்றியை உடையவளே! நம்முடனேயே இருந்தும் நமக்கு உதவியாக இருக்காமல் இப்படியெல்லாம் நம்மைக் கைவிட்டு துரோகம் செய்கின்ற உள்ளம் நமக்கு இருக்கும்போது நாம் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியபடி செய்து வெற்றிபெற நம்மால் முடியுமா?

(என்று தலைவி தன் தோழியைப்பார்த்துக் கூறுவதாக அமைந்த பாடல் இது)

# விளையாட்டு

## மட்டுநகரில் பிரகாசித்த நட்சத்திர கால்பந்து வீரன் அமரர் மு.சுதாகரன் (பாடுமீன் சுதா)


அமரர் மு.சுதாகரன்

1990 ஆம் ஆண்டு காலப்பகுதி மட்டக்களப்பின் வரலாற்றில் இளைஞர்கள் எதிலும் ஆர்வம் செலுத்த முடியாதவாறு அவர்களை வீடுகளுக்குள் முடக்கிய காலமாக இருந்தது.

இக்காலத்தில் வளர்ந்த இளைஞர்களைத் தாய்மாரும் தந்தைமார்களும் கோழி அடை காப்பது போல் காத்து வளர்த்தனர். பாடசாலைக்குச் செல்வதற்குப் பயம், விளையாடப் போவதற்குப் பயம், எப்போதும் எதுவும் நடக்கலாம் எனும் அசாதாரண வாழ்வு எம்மை ஆக்கிரமித்திருந்த அக்காலத்திலும் மட்டு நகரில் கால்பந்தாட்டம் மங்கி மறைந்து விடவில்லை.

மாறாக அந்த அசாதாரண காலத்திலும் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தை 1970,80 களில் பிரகாசித்த மூத்த தலைமுறையினர் தம் தோள் மீது சுமந்து காப்பாற்றி வளர்த்தனர். இந்த மூத்த தலைமுறையினருடன் இணைந்து அக்காலத்தில் கால்பந்தாட்டத்தினை வளர்த்த மிகச்சில இளைஞர்களுள் ஒருவராக அமரர் மு.சுதாகரன் அவர்கள் திகழ்ந்தார்.

மட்டக்களப்பின் கல்லடித்தெருவினைச் சேர்ந்த மு.சுதாகரன் அவர்கள் மட்டுநகர் பாடுமீன் கழகத்தைத் தனது தாய் வீடு போலக் கருதி கால்பந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டவர். 1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆந் திகதி பிறந்த இவர், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வி கற்றவர், பாடசாலைக் காலத்திலேயே சிறந்த கால்பந்தாட்ட வீரராகத் தன்னை இனங்காட்டியவர்.

தேசிய அணியில் விளையாடக் கூடிய தகுதியுடன் 1990 களில் ஜொலித்த மட்டு நகரின் கால்பந்தாட்ட நட்சத்திர வீரனே சுதாகரன் ஆவார். அக்காலத்தில் இலங்கையின் தேசிய அணியில் ஆடிய வீரர்களின் கழகங்களுடன் பாடுமீன் கழகம்

**கௌரீஸ்வரன்**

பல போட்டிகளில் பங்குபற்றிய போது சுதாகரன் தேசிய அணியின் வீரர்களையும் மேவித் தனது திறமையினை வெளிக்காட்டியிருந்தார்.

இவ்விதம் கால்பந்தாட்டத்தில் சுதாகரன் அவர்கள் எவ்வளவுதான் திறமையினை வெளிக்காட்டியிருந்தும் தேசிய மட்டத்தில் அவருக்கு வாய்ப்புக்கள் கிடைக்காமை பெருங்குறையாகவே இருந்தது.

மட்டக்களப்பில் விளையாடிய ஜோசப் வின்சன்ற், ரெட்ணசிங்கம், கெனடி எனப் பல வீரர்கள் தேசிய மட்டத்தில் விளையாடும் தகுதியைப் பெற்றிருந்தும் அது அவர்களுக்கு கிடைக்காதிருந்ததைப் போல் 1990 களில் பிரகாசித்த சுதாகரனுக்கும் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை.

மெலிந்த உடலமைப்பு, மிகவும் வேகமான பந்து நகர்த்துகை, பந்தினைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து எதிரணிகளின் பின்கள வீரர்களை இலாவகமாக ஏமாற்றி முன்னகர்த்தும் விவேகம், மூலை உதைகளை அந்தரத்தில் பாய்ந்து உதைத்து கோலாக்கும் ஆற்றல், மேலே வரும் பந்தை மார்பினால் தன்வயப்படுத்தும் இலாவகம், உணர்ச்சிவயப்படாமல் அறிவாக ஆடும் பக்குவம் என்பன சுதாகரனின் கால்பந்தாட்ட ஆற்றுகையின் சிறப்பியல்புகளாக இருந்தன.

1990 களில் பாடுமீன் அணிக்கு மூலை உதை கிடைத்தால் அது கோலாக மாறுவது பெரும்பாலும் நடந்து விடும், தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தராக உள்ள திரு வே.ஈஸ்வரன் (1990 களில் பாடுமீன் கழகத்தில் சுதாகரனுடன் விளையாடியவர்) அவர்கள் மூலை உதையினை கோலாகும் விதத்தில் அனுப்புவார் அதை சுதாகரன் பெரும்பாலும் கோலாக்கியே தீருவார். பல போட்டிகளில் இவ்வாறு கோல் போட்டு அக்காலத்தில் பாடுமீன் கழகத்திற்கு வெற்றிக் கனியைச் சுதாகரன் பறித்துக் கொடுத்துள்ளார்.

இன்று ஐரோப்பிய கால்பந்தாட்டத்தில் எவ்வாறு கிறிஸ்டியானோ றொனால்டோ முக்கியமாகவும் பிரபலமாகவும் உள்ளாரோ, அது போலவே 1990 களில் பாடுமீன் கழகத்திலும் மட்டக்களப்பு தெரிவு அணியிலும் ஒரு நட்சத்திர கால்பந்தாட்ட வீரராக மு.சுதாகரன் பிரகாசித்தார்.

1992 ஆம் ஆண்டு மட்டுநகர் வெபர் அரங்கில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண கால்பந்தாட்டப் போட்டியில் திருகோணமலை மாவட்டத்தின் பலம் வாய்ந்த கால்பந்தாட்ட அணிக்கு எதிராக அமரர் சுதாகரன் போட்ட கோல் அந்தப் போட்டியினைப் பார்வையிட்ட இரசிகர்களால் மறக்க முடியாதது. இவ்வாறு மறக்க முடியாத பல கோல்களை சுதாகரன் போட்டிருக்கின்றார்.

1990 களில் வெபர் மைதானத்தில் கால்பந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட்ட கட்டிளமைப் பருவத்தினரைக் கவர்ந்த கால்பந்தாட்ட நட்சத்திரமாகவும் இவர் திகழ்ந்தார்.

இத்தகைய மாபெரும் கால்பந்தாட்ட வீரன் 27.05.2013 ஆம் திகதி எம்மை விட்டுப் பிரிந்தமை துயரமாகவே உள்ளது. அமரர் சுதாகரனைப் போல் பல வீரர்கள் மட்டுநகரில் உருவாக வேண்டும் எனும் ஆவலுடன் அமரர் சுதாகரனை ஞாபகத்தில் வைத்திருப்போம்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## தேசிய மெய்வல்லுநர் போட்டியில் மண்ணுக்கு புகழ் சேர்த்த வீரர்கள் கௌரவிப்பு.





(காரைதீவு சகா)

44வது தேசிய விளையாட்டு பெருவிழா மற்றும் 30 வது தேசிய இளைஞர் விளையாட்டு விழா என்பவற்றில் மெய்வல்லுனர் போட்டிகளில் தங்கப் பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாய்ந்தமருது, கல்முனை, அட்டாளைச்சேனை மண்ணுக்கு புகழையும் அம்பாறை மாவட்டத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் பெருமையையும் சேர்ந்துத் தந்த வீரர்களை ஊர்வலமாக அழைத்து கௌரவிக்கும் நிகழ்வு 13.11.2018 சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

44வது தேசிய விளையாட்டு பெருவிழா மற்றும் 30 தேசிய இளைஞர் விளையாட்டு விழா என்பவற்றில் மெய்வல்லுனர் போட்டிகளில் தங்கப் பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்ற வீரர்களான எம்.வை.எம்.றக்கீப், ஏ.ஜீ.எம். மஸ்பூத், ஏ.எம்.எம்.ஆசாத்கான், எம்.யூ.ஏ.சம்லி, எம்.ஐ.எம்.எப்.இஹ்ஜாஸ், எம்.ஏ.எம்.றஸ்பாஸ், ஏ.எம்.எம்.றிஸ்வான், ஏ.எம்.ஐ.அக்தாப் ஆகியோரை ஊர்வலமாக பேண்ட் வாத்தியத்துடன் சாய்ந்தமருது பிரதான வீதி, ஸாஹிரா வீதி, கடற்கரை வீதி, மாளிகா வீதி ஊடாக பிரதேச செயலகம் வரை அழைத்து வரப்பட்டனர்.

ஊர்வலத்தின் போது வர்த்தகர்கள், வர்த்தக நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், பாடசாலைகள், மீனவர்கள் வீரர்களுக்கு மாலைகள், பொன்னாடைகள் அணிவித்து, பரிசுப் பொருட்கள், கிண்ணங்கள் வழங்கி கௌரவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வு, பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதேச செயலக கணக்காளர் ஏ.எல்.எம்.நஜிமுதீன் பிரதம அதிதியாகவும்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 11

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### வேற்றுமை

- பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

1. பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு **ஏற்காத** சொல்
   (1) மகனை (2) மகனே (3) மகனால் (4) அப்பாவுக்கு

2. மனத்தில் நல்ல எண்ணங்களை உருவாக்குங்கள். இதில் ‘இல்’ உருபு உணர்த்துவது
   (1) ஏழாம் வேற்றுமை (2) ஆறாம் வேற்றுமை (3) ஐந்தாம் வேற்றுமை
   (4) நாலாம் வேற்றுமை

3. கண்ணன் அழகாகப் பாடுகிறான். இங்கு ‘கண்ணன்’ என்பது
   (1) எட்டாம் வேற்றுமை (2) ஆறாம் வேற்றுமை (3) ஐந்தாம் வேற்றுமை
   (4) முதலாம் வேற்றுமை

4. பின்வருவனவற்றுள் ஆறாம் வேற்றுமைக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு
   (1) வீட்டுக்கூரை (2) காட்டு மிருகம் (3) கல்லெறிந்தாள்
   (4) பொய் சொல்லாதே

5. அவனது பார்வை எனக்குப் பிடிக்கவில்லை. இங்கு வந்துள்ள ‘அது’ என்பது
   (1) ஏழாம் வேற்றுமை (2) ஐந்தாம் வேற்றுமை (3) ஆறாம் வேற்றுமை
   (4) நாலாம் வேற்றுமை

6. பின்வருவனவற்றுள் கிழமைப் பொருள் உணர்த்தும் வேற்றுமை
   (1) இரண்டாம் வேற்றுமை (2) மூன்றாம் வேற்றுமை (3) நாலாம் வேற்றுமை
   (4) ஆறாம் வேற்றுமை

7. பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு **இல்லாத** வேற்றுமை
   (1) ஏழாம் வேற்றுமை (2) ஆறாம் வேற்றுமை (3) ஐந்தாம் வேற்றுமை
   (4) முதலாம் வேற்றுமை

8. வேற்றுமைப் பொருளால் வேறுபட்டமையும் தொடர்
   (1) மலைக்கோயில் (2) முருகன் கோயில் (3) மாணவர் வரவு
   (4) மலையுச்சி

9. ‘இவன்’ என்பது உடைமைப் பொருளில் வருவதற்கு எடுத்துக்காட்டு
   (1) காலையில் இவன் பேசியது எனக்குப் பிடிக்கவில்லை.
   (2) இவனின் உள்ளம் கள்ளங்கபடமற்றது.
   (3) இவனால் பிரச்சினை வராது.
   (4) நாங்கள் இவனிடம் பேசிப் பலனில்லை.

10. பின்வருவனவற்றுள் ஆக்கல் பொருள் உணர்த்துவதற்கு எடுத்துக்காட்டு
    (1) மரத்தில் ஆணி அடித்தான் (2) மரத்தைத் தறித்தான்
    (3) பழத்தைப் பறித்தாள் (4) மரத்தை நாட்டினாள்

11. ‘ஒடு’ உருபு அடைமொழிப் பொருளில் வந்ததற்கு உதாரணம்
    (1) அம்மாவோடு போனான் (2) பண்போடு பழகுவான்
    (3) தம்பியோடு விளையாடுவான் (4) உன்னோடு பேசமாட்டேன்

12. தகுதிப் பொருள் உணர்த்தும் வேற்றுமை
    (1) ஏழாம் வேற்றுமை (2) ஐந்தாம் வேற்றுமை (3) ஆறாம் வேற்றுமை
    (4) நாலாம் வேற்றுமை

13. நாலாம் வேற்றுமை என்பது
    (1) எழுவாய் வேற்றுமை (2) இட வேற்றுமை (3) கொடை வேற்றுமை
    (4) நீங்கல் வேற்றுமை

14. பின்வருவனவற்றுள் உடைமை வேற்றுமை **அல்லாதது**
    (1) என் கை (2) அவனுடைய தந்தை (3) நம் நாடு (4) தங்கக் காப்பு

15. மகள் என்பது ஏகார ஈறு பெற்று ‘மகளே’ என வருவது
    (1) ஏழாம் வேற்றுமை (2) எட்டாம் வேற்றுமை (3) நாலாம் வேற்றுமை
    (4) மூன்றாம் வேற்றுமை

**“வாசிப்பில் வறுமை இருந்தால்**
**வாழ்க்கையில் வெறுமை இருக்கும்”**

**– த. யுவராஜன்**

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குபரிசில் வழங்கப்படும். முடிவுத் திகதி : 22.11.2018.

அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

# கற்போம்

## பதம் -விடை

‘பதம்’ என்னும் தலைப்பில் சென்ற வார அரங்கத்தில் கேட்கப்பட்ட இருபது வினாக்களுக்கும் எவரும் சரியாக விடையளிக்கவில்லை. சரியான விடை இதோ :

| | | | |
|---|---|---|---|
| 1. (1) | 6. (2) | 11. (1) | 16. (1) |
| 2. (3) | 7. (1) | 12. (3) | 17. (3) |
| 3. (2) | 8. (2) | 13. (2) | 18. (4) |
| 4. (4) | 9. (4) | 14. (3) | 19. (3) |
| 5. (3) | 10. (4) | 15. (2) | 20. (4) |

குறிப்பு : **புணர்ச்சி** என்னும் தலைப்பில் (இதழ் 37) கேட்கப்பட்ட வினாக்களுக்கு, கல்குடா வலயத்திலுள்ள வம்மிவட்டவான் வித்தியாலய மாணவர்கள் எட்டுப்பேர் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவ்விடைகள் எமக்குக் காலம் தாழ்த்தியே கிடைத்தன. அதனால் அவற்றைப் போட்டியில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. ஆதலால் உரிய திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். இருப்பினும் ஆர்வத்துடன் விடைகளை அனுப்பிய வம்மிவட்டவான் வித்தியாலய மாணவர்களுக்கு அரங்கம் நன்றி கூறுகின்றது.

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

- இலங்கையில் தயாரித்து வெளியிடப்பட்ட முதலாவது திரைப்படம்.
  **கடவுண பொறந்துவ** *Kadawunu Poronduwa* - **1947**
- இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது வர்ண திரைப்படம்.
  **ரண்முத்து துவ**
- அரசின் நிர்வாக ரீதியான செய்திகளை தாங்கிவரும் அதிகார பூர்வமான ஏடு :
  **வர்த்தமானி (1802 முதல் வெள்ளி தோறும்)**
- இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களினால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்து வெளிவரும் நூல் : **ஹன்சார்ட்.**
- கலாசார/ பண்பாட்டு முக்கோண வலயம் - அனுராதபுரம், பொலநறுவை,கண்டி
- தென்னை முக்கோண வலயம் - **குருநாகல், சிலாபம்,கொழும்பு**

- இலங்கையை ஆட்சி செய்த முதல் அரசி – **அனுலா**
- இலங்கையை ஆட்சிசெய்த முதல் போர்துக்கேய தளபதி -**அசவேடா**
- முதலாவது பிரதம நீதியரசர்-**சேர் எட்மண்ட் கரிங்கடன்(1802-1806)**
- இலங்கையின் முதலாவது பெண் ஆளுநர் - **குமாரி பாலசூரியா**
- இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாகியது-**1802**
- கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றியது - **1815**
- கண்டியை ஆண்ட கடைசி மன்னன் - **ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்.**
- கொழும்பு-கண்டி வீதியை நிர்மானித்தவர்- **சேர்எட்வேட் பாண்ஸ்1802**
- கண்டி தலதாமாளிகையை கட்டியவன் -**முதலாம் விமலதர்ம சூரிய**
- யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் - **சங்கிலியன்**
- இலங்கை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண்மணி :
  **புளொரன்ஸ் சேனாநாயக்கா.**
- இலங்கை தொழிற்சங்கத்தை உருவாக்கியவர் - A.E. **குணசிங்க**
- ரூபா, சதக்குற்றி நாணயம் **1872** முதல் புழக்கத்துக்கு வந்தது.
- தாள் நாணயம் 1**885** முதல் புழக்கத்துக்கு வந்தது.
- மே தினத்தை விடுமுறை தினமாக்கியவர் - T.B. **இலங்கரத்ன (முன்னாள் தொழிலமைச்சர்)**
- போயா நாட்கள் விடுமுறையாக்கப்பட்டது - **1966**
- கிராம சேவகர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது - **1963**
- முதலாவது அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது - **1857**

## பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## இயற்கையோடு இயற்கையாக வாழ்தல்

செய்திருக்கின்றனர். இதன்மூலமாக மாணவர்களிடையே மனப்பலமும், அனுபவக்கற்றலும் ஏற்பட்டிருப்பதாகவே உணருகின்றேன்.

பாடசாலையின் வளர்ச்சியில், பெற்றோரது பங்களிப்பென்பது மிகவும் அவசியமானதொன்று, பணரீதியான பங்களிப்புக்களை விடுத்து, பெற்றோர்களும் பாடசாலையோடு இணைந்து செயற்படுவதென்பதுதான் மிக முக்கியமான விடயமாகின்றது. அவ்வகையில் இவ்விழாவில் பெற்றோர்களின் பங்களிப்பினை அதிகம் காணக்கூடியதாகவிருந்தது. காலையில் தொடங்கி மாலை முடியும் வரை, நிகழ்வில் கொல்லநுலை சமூகமே பங்குபற்றிருந்தது. மக்கள் மனதில் ஆனந்தம் மேலோங்கியிருந்தமையை



காணவும் முடிந்தது. இவ்வாறாக பார்க்கின்ற போது, ஒரு விழா ஒட்டுமொத்த சமுகத்தினையும் இணைந்திருக்கின்றது. பெற்றோரின் "தம்மை மறந்த மகிழ்ச்சிகரமான நிலை", அவர்களது, மனகஸ்டங்களையும் நீக்கியிருக்கின்றது. இதே போன்று மாணவர்கள் பங்கேற்க கூடிய நிகழ்வுகளை நடாத்துகின்ற போது, அனேக விடயங்களை மாணவர்கள் அனுபவத்தில் கற்றுக்கொள்வதுடன், சூழலிலும், எதனையும் எதிர்கொண்டு வெற்றிகரமானதும், மகிழ்ச்சிகரமானதுமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வர். அவ்வாறான மனப்பலமுள்ள மாணவர்களை உருவாக்குவதற்கே அனைத்து கல்விசார் உத்தியோகத்தர்களும் சிந்திக்க வேண்டுமென' கூறிவிட்டு சசிகுமாரும் அவ்விடத்தினை விட்டு அகன்றான்.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பில் இராசதுரைக்கு பின்னர் முடிசூடா மன்னாகத் திகழும் ஹிஸ்புல்லா

பேசுகின்ற போக்குகள் இல்லாமல் இருந்திருந்தால் மட்டக்களப்பில் தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அரசியல் தலைவராக ஹிஸ்புல்லா விளங்கியிருப்பார்.

எது எப்படியோ இராசதுரைக்கு பின்னர் மட்டக்களப்பில் முடிசூடா மன்னனாக திகழ்பவர் ஹிஸ்புல்லாதான்.

தொடர்ச்சி...

## தேசிய மெய்வல்லுநர் போட்டியில் மண்ணுக்கு புகழ் சேர்த்த வீரர்கள் கௌரவிப்பு.

உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். ஜஃபர், இளைஞர் சேவைகள் அதிகாரி என்.ரீ.எம்.ஹாறூன், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜஃபர், பிரதம இலிகிதர் எம்.எம்.றசீட், கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையின் விளையாட்டு ஆசிரியர் யூ.எல்.எம்.பைசர், விளையாட்டு உத்தியோகத்தர் யூ.எல்.எம்.றிசாட், சமுர்த்தி உதவி முகாமையாளர் ஏ.எம்.எம்.றியாத், நுஜா ஊடக அமைப்பின் தலைவர் எஸ். எம்.அறூஸ், இளைஞர்; பாராளுமன்ற உறுப்பினர் எப்.எம்.தில்சாத், சாய்ந்தமருது இளைஞர்; கழக சம்மேளன பிரதித் தலைவர் எம்.ஐ.இக்தார், நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ஆதிப் ஆரிபீன் உள்ளிட்ட இளைஞர் கழக உறுப்பினர், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் வீரர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி...

## 19வது திருத்தச் சட்டம் 212 MPக்கள் தமக்குத் தாமே வைத்துக்கொண்ட சூனியம்

அரசியலமைப்பு நெருக்கடியாக உருவெடுத்திக்கிறது. ஜனநாயக நெருக்கடியாக பூதாகரமாகியுள்ளது.

ஜனாதிபதியும், பாராளுமன்றமும், சட்ட மா அதிபரும், உயர் நீதிமன்றமும் ஆளாளுக்கு அரசியலமைப்பை வெவ்வேறு அர்த்தம் கொள்ளத் தக்கவகையில் வியாக்கியானப்படுத்துமளவுக்கு பலவீனமான ஒரு அரசியலமைப்பை ஆக்கியது யார் பொறுப்பு? ஜனநாயகத்தைப் இழுக்காகக் கூடிய ஓட்டைகளை அடைப்பதாகக் கூறிக்கொண்டு அதிகார துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கக்கூடிய அளவுக்கு ஓட்டைகளை மிச்சம் வைத்தவர்கள் யார்?

இதுவா மாதக்கணக்கில் விவாதித்து கொண்டு வந்த திருத்தம்? இன்று ஜனாதிபதியை குற்றம் கூறுபவர்கள் தமது அசட்டைத் தனத்தை சுயவிமர்சனம் செய்துகொள்வார்களா? நாட்டை தாங்கி வைத்திருக்கும் அரசியலமைப்பின் ஓட்டைகளால் நாடு வரலாறு காணாத பாரிய நெருக்கடியை சந்தித்திருக்கிறதே அதற்கு பொறுப்பேற்பார் யார்? அரசியலமைப்பை திருத்தும் அளவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் மீண்டும் இலங்கையின் வரலாற்றில் அமைவது என்பது அவ்வளவு எளிதான காரியமா? இன்னும் இந்த நாடு எத்தனை காலம் தான் அதற்குத் தவம் இருக்க வேண்டும்?

தொடர்ச்சி...

## சிங்கப்பூர் பிரதி உயர்ஸ்தானிகர் மட்டக்களப்பு வருகை

பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் திட்ட மொழிவுகள் பரிமாறப்பட்டன. இதன்போது சிங்கப்பூர் தேசிய நூலகக் குழுவினால் வழங்கப்பட்ட 3500 புத்தகங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடப்பட்டது.

சிங்கப்பூர் அரசின் நன்கொடையின் அடைப்படையில் பெற்றுக்கொள்ளப்படவுள்ள இப்புத்தகங்கள் அனைத்தும் மட்டக்களப்பு மாநகரசபையின் பராமரிப்பின் கீழ் இயங்கும் நூலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படவுள்ளன.

தொடர்ச்சி...

## "அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கள்" – அறிந்திருக்க வேண்டிய கதை

என்றெல்லாம் சொல்லப்படும் பரப்புரைகளில் எந்த உண்மையும் இல்லை. அதுவும் நம் கார்த்திகையின் திரிந்த வடிவம் தான். கார்த்திகையை தீபாவளியை விட விமரிசையாகக் கொண்டாடுவது ஒன்றே நாம் செய்யக்கூடியது.

இந்தக் "கார்த்திகை விளக்கீடு" என்ற சொல்லை இன்று நாம் சாதாரணமாகப் பயன்படுத்தி வருகிறோம். இது சம்பந்தர் காலத்தில் புழங்கிய சொல். குறைந்தது, 1300 ஆண்டுகள் பழைமைவாய்ந்த சொல் என்று எண்ணிப்பார்க்கும் போது மெய் சிலிர்க்கிறது. சங்க இலக்கியங்கள் என்று செல்லும் போது, அதன் பழைமை இன்னும் பின்னுக்குத் தள்ளப்பட்டு சுமார் 2000 வருடங்கள் என்று செல்கின்றது. சாதாரண மனித ஆயுள் வெறும் 70 – 80 ஆண்டுகள் இருக்குமா? சும்மா கணக்குப் போட்டுப் பாருங்களன், 2000 ஆண்டு என்றால் எத்தனை தலைமுறை தாண்டிச் சென்றிருக்கும்? அத்தனை ஆண்டுகள் முந்தி வாழ்ந்த நம் முப்பாட்டி ஒருத்தியோடு, முப்பாட்டன் ஒருவனோடு நாம் கொள்ளும் உறவு தான் இந்தக் கார்த்திகைத் திருவிழா. அவனும் அவளும் கொண்டாடியது போலவே அகல் விளக்கில் தீபமேற்றி, முன்னோரைப் போற்றிக் கொண்டாடுகிறோம், நாம் அவர்களை இக்கணத்தில் எண்ணிப்பார்ப்பது போலவே, அவர்கள் அவர்களுக்கும் முந்திய முன்னோரை இதே நாளில் எண்ணிப் பார்த்திருப்பார்கள் என்பதை சிந்தியுங்கள்.

எத்தனை ஆயிரம் ஆண்டுகள் முந்தி வாழ்ந்த நம் இரத்தசொந்தம் ஒன்றுடன் மானசீகமாக உறவாடுகிறோம்! கண்கள் பனிக்கச் செய்யும் அற்புதமான தருணங்களுள் ஒன்று அது!

தொடர்ச்சி...

## 14 வயது சிறுமியை பாலியல் துஸ்பிரயோம் செய்த....

இதனையடுத்து தாயார் கண்விழித்து மின்சார விளக்குகளை எரியவைத்து வீட்டை சோதனையிட்டபோது அறையில் இருந்த இளைஞர் அங்கிருந்து யன்னல் ஊடாக தப்பி ஓடியுள்ளார். இதனைக்கண்ட தாயார் சிறுமியிடம் விசாரித்தபோது இளைஞர் தொடர்பாக தகவல் பெற்றுக் கொண்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிசாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இளைஞரை திங்கட்கிழமை மாலை கைது செய்ததுடன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவுள்ளதாகவும், சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

## உமாரமணன் முழுத்தீவுக்கான சமாதான நீதவானக பதவிப்பிரமாணம்..



காரைதீவைச் சேர்ந்த கோணேஸ்வரன் உமாரமணன் முழுத்தீவுக்கான சமாதானநீதவானாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் இலங்கை மென்பந்து கிரிக்கட் கட்டுப்பாட்டு சபையின் அம்பாறை மாவட்ட உபதலைவரும் அம்பாறை மாவட்ட இலங்கை கடினப்பந்து கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை சுற்றுப்போட்டிக்குழு உறுப்பினரும் ஜேர்மன் நம்பிக்கை ஒளியின் கிழக்கு மாகாண பணிப்பாளரின் பிராந்திய செயலாளரும் விவேகானந்தா விளையாட்டுக்கழக முன்னாள் செயலாளரும் ஆவார்.

(காரைதீவு நிருபர் சகா)

## கல்முனை வடக்கு பதில் பிரதேச செயலாளராக ஜே. அதிசயராஜ்!



கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக ஜே. அதிசயராஜ் கடமைகளை 08.11.2018 அன்று பொறுபேற்றுள்ளார்.

அவர் கடந்த காலங்களில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராகவும் பதில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வந்துள்ளார். தற்போது கல்முனை பிரதேச செயலகத்தின் செயலாளர் எஸ்.ஜெயரூபன் உடல் உபாதையால் கொழும்பில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரது இடத்திற்கு பதில் கடமைக்காக திரு.ஜே.அதிசயராஜ் கல்முனை பிரதேச செயலக செயலாளராக பொறுப்பேற்றுள்ளார்.

(காரைதீவு நிருபர் சகா)







Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa